தென்மொழி

வரிசைக்கு முந்துமின்!

துணிவுற்ற சூழ்ச்சிப் பகைவரை
வீழ்த்தும் துடிப்புடனே
திணிவுற் றெழுந்த நற்றோள்
கலிப்பத் திசைக ளெங்கும்
தணிவற்ற விடுதலை வேட்கையின்
வீரத் தமிழ்முழக்கி
அணிபற்றி நின்றனர் ஆண்மையர்
யாவரும் முந்துமினே!

'சற்றும் நயன்மை கருதாது
வெற்றுரை யாற்பசப்பி
எற்றிப் பிழைக்கின்ற மாற்றாரை
இனியும் விடுவதில்லை;
முற்றும் புதிதான பாடம்
பயிற்றுதும்!' – எனமுனைந்து
நிற்குந் திறவோர் வரிசைக்கு
ஒல்லையின் முந்துமினே!

– இறை

சுவடி 28
ஓலை 2

விலை
உருபா : 4.00

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தி.பி. உ0உஎ ; கும்பம்
1996 பிப்பிரவரி

நாம் திராவிடரா?

தமிழர்கள் தங்களைத் திராவிடர் என்று கூறிக் கொண்டதால் தமிழர் என்னும் மொழியடைப்படையிலான இனப்பெயர் நிலைபெறாமல் போனது. மற்ற திராவிட மொழிக்காரர்களான தெலுங்கர், கன்னடர், மலையாளர், துளுவர், முதலியவர்களுக்கெல்லாம் தங்கள் மொழி தழுவிய தேசியம் குறித்த மொழியினப் பெயர் நிலைத்திருக்கத் தமிழர்க்கு மட்டும் மொழிவழிக் குறித்த தேசிய இனப்பெயர் தோன்றாமலே போய்விட்டது. இந்த இழப்பே இன்று தமிழினத்தை ஒன்றுபடுத்துவதற்குப் பெருந்தடையாக உள்ளது என்பதைத் தமிழர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

பிராமணர்கள் தங்களைத் தமிழர்கள் என்று கூறிக் கொள்கிறார்கள் என்பதற்காக நாம் நம்மைத் திராவிடர் என்று கூறிகொள்ளத் தேவையில்லை. அது வரலாற்று உண்மையும் இல்லை; சரியானதும் இல்லை. தமிழரையே அவர்கள் இவ்வுணர்வு பெற்று ஒன்றுபட்டுவிடக் கூடாது என்பதற்காகவே திராவிடர்கள் என்று கூறத்தொடங்கினார்கள் என்னும் வரலாற்று உண்மையை எந்த வகையிலும் நாம் மறந்துவிடக்கூடாது.

நம்மை, ஆரியப் பார்ப்பனர்கள் கருத்துப்படி சூத்திரர், சற்சூத்திரர் (நல்ல சூத்திரர். அஃதாவது ஆரியப்பார்ப்பனர்களுக்கு அடங்கி நின்ற சூத்திரர்), பஞ்சமர், (ஐந்தாம் பிரிவினர்) என்றெல்லாம் கூறிக்கொள்வது எவ்வளவு தவறோ, கேடோ, தன்மான தன்மதிப்பு (சுயமரியாதை) இழப்போ; அவ்வளவு தவறும் கேடும், தன்மான- தன் மதிப்பு இழப்பும் நம்மைத் திராவிடர் என்று கூறிக் கொள்வதிலும் சேரும் என்பதை நாம் முதலில் இந்தக் காலக்கட்டத்திலேனும் எண்ணி ஒப்புக்கொள்ளுதல் வேண்டும்.

– பாவலரேறு – தமிழ்நிலம் (இதழ் எண் : 168)

ஒரு தெரிவிப்பு

தென்மொழியின் சென்ற இதழ் (சுவடி:28 ஓலை:1) அட்டையில் இடம் பெற்றிருக்கும்கதைக்கின்றோம் நலம் சிதைக்கின்றோம்' என்னுந் தலைப்பிலான பாடல்களும், உட்புறம் முதற்பக்கத்தில் கையெழுத்து வடிவிலுள்ள 'என்னைப் பற்றி' எனவும் 'மொழியை இனத்தை' எனவும் தொடங்கும் இரு பாடல்களும் பாவலரேறு ஐயா அவர்களால் உடல்நலங் குன்றியிருந்த நிலையில் எழுதப் பெற்றவை. தென்மொழி அச்சகக் கோப்பிலிருந்து எடுத்து வெளியிட்டுள்ளோம்.

–ஆசிரியர்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தென்மொழி

மொழி—இனம்—நாடு

நம்முச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமுச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

சுவடி : 28) தி.பி.உ0உஎ – கும்பம் (பிப்பிரவரி–'96) (ஓலை 2)

வினைக்களத்தில் பாவலரேறு தமிழ்க்களம்!

ஆயிரக்கணக்கான இளைஞர்களுடைய உள்ளத்தில் தமிழ் பற்றிய பெருமிதவுணர்வைத் தோற்றுவித்துப் போர்க்குணத்தையும் செயல் திறத்தையும் வளர்த்து விட்டதோடு, இனநல, நாட்டுரிமை முயற்சிகளில் ஈடுபடும் தமிழியல் வாழ்வுக்கு வழிகாட்டிய நம் அரும் பெறல் ஆசான் பாவலரேறு ஐயா அவர்கள் அமைவு கொண்டுள்ள இடமான சென்னை-மேடவாக்கத்தில், 'பாவலரேறு தமிழ்க்களம்' அமைப்பதற்கான அடிப்படை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

தமிழ் மொழி, இன நாட்டுரிமைகளுக்காக அல்லும் பகலும் அருந்தொண்டாற்றிய ஆற்றலாளர் ஐயா அவர்களின் அமைவிடம் தமிழ்ப் பெருமக்களுக்கான தமிழ்க்களம்!

தமிழிய மரபு தழுவிய மெய்யியலோடு முழுமையான மக்கள் விடுதலைக்காக ஆரிய, வல்லரசிய விலங்கொடிக்க எழுந்த அடலேறு ஐயா அவர்களின் தமிழ்க்களம் நினைவகம் மட்டுமன்று; வினையூக்கும் தமிழ் நிலம்!

எனவே, தமிழ்க்களத்தை எவ்வாற்றானும் சிறப்புற நிறுவ எண்ணி அருங்கலை வல்லுநர்கள் மற்றும் பல்வகைக் கட்டடவியல்

பொறியியலாளர்களுடன் கலந்தாய்ந்து ஏற்புறு முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்று வருகின்றன.

மொழியுரிமைக்குக் கிளர்ந்தெழுந்து பாடுபடுவதோடு, தமிழை அறிவியல் நோக்கு போக்குகளுக்கு ஏற்பப் புதிய துறைகளிலும் வளர்த்து வளப்படுத்துவதும்,இம் மக்கட் பண்பியல்,கலையியல் மற்றும் வாழ்வியல் துறைகளை மீட்டெடுத்து மறுமலர்ச்சியுறச் செய்வதும் பிறவுமான பல்வகை முயற்சிகளை மேற்கொண்டு செயலாற்றுவதோடு இவற்றுக்கு அடிப்படையான நூலகம்-ஆய்வுக்களம் ஒன்றை நிறுவும் நிலையில் தமிழ்க்களம் தன் பணியைத் தொடங்கும்!

'பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறக்கட்டளை' என்னும் பெயரில்,நெறிமுறைப்படி அறக்கட்டளை பதிவு செய்யப் பெற்றுள்ளது.

இப் பாவலரேறு தமிழ்க்கள அமைப்பு முயற்சிகளுக்கான பொருள்நிலை கருதி நன்கொடை திரட்டும் முயற்சி மேற்கொள்ளப் பெற்றுள்ளது. பல்வேறு கட்சித் தலைவர்கள், இயக்கங்கள் மற்றும் பொதுநல அமைப்புகளின் தலைவர்களைச் சந்தித்தும் தொடர்புகொண்டும் அமைப்புக் குழுவினர் செயலாற்றி வருகின்றனர்.

தமிழ் மொழி, இன, நாட்டுணர்வாளர் அனைவருடைய நற்றுணையாலுமே இந் நன்முயற்சிகள் நிறைவேற வேண்டியிருப்பதால் அனைவருடைய பங்களிப்பும் பாவலரேறு தமிழ்க் களத்திற்குத் தேவை!

தமிழ்க்களத்திற்கான ஒவ்வொரு துளிக்காசும் தமிழ்ப்பெரு மக்களின் உழைப்பைக் காட்டும்; மக்களுரிமை முயற்சிகளை நிலைநாட்டும்!

பரவலாக நன்கொடை தண்டும் முயற்சியில் மாவட்டந்தோறும் தென்மொழியன்பர்களில் பலர் பொறுப்பேற்று ஈடுபட்டு வருகின்றனர் (பட்டியல் அடுத்த இதழில் இடம் பெறும்.)

நன்கொடை நல்குவோர்,' பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறக்கட்டளை' என்னும் பெயரில் வரைவோலையாகவோ, காசோலையாகவோ, பணவிடை வழியோ தொகை வழங்கலாம் (நன்கொடையாளர்க்கு வருமான வரி விலக்கு உண்டு.)

தமிழ்க்கள அமைப்பு தமிழர்களை இணைக்கும் !

அனைவரும் முயன்று 'பாவலரேறு தமிழ்க்கள'த்தைச் செறிவுற நிறுவுவோம்; செயல்படுவோம்!

– இறை

எங்கே தமிழினம்...?

– குன்றன்

பல காலம் மன்னராட்சியிலேயே பழக்கப்பட்டு வந்தது தமிழினம். தமிழ் நாட்டுக்குள்ளேயே அடிக்கடி நடந்த போர்களில் எந்தத் தமிழ் மன்னரின் கீழும் வாழ்ந்து பழகியது தமிழினம்.

இந்தப் பழக்கமானது ஆங்கிலேயர் ஆட்சியிலும் மிகப்பெரிய வாழ்க்கை மாற்றத்தை ஏற்படுத்தாமல் எளிதாகவே எடுத்துக் கொள்ளப் பயனானது.

ஆனால்,ஆங்கிலேயர் ஆட்சிக்குப்பின் ஏற்பட்ட மக்களாட்சியின் கீழ், தங்கள் வாழ்வை அமைத்துக் கொள்வது என்பதே தமிழர்களுக்குப் புதிதாக இருந்தது. தனி மாந்தர்களின் ஆளுமையின் கீழ் வாழ்ந்த நிலை போய் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற குழுவின் ஆளுமைக்குக் கீழ் வாழும் நிலை முற்றிலும் புதியதாக இருந்தது.

அதிலும் ஒரு தேசிய இனமாக வாழ்ந்திருந்த நிலையிலிருந்து பல தேசிய இனங்களை ஒன்றிணைத்து ஒரு நாடு என உருவாக்கப் பட்டபோது அவ்வினங்களுக்கிடையில் போட்டிபோட்டு வாழத் தெரியாத பின் தங்கிய இனமாக இன்றைக்குத் தமிழினம் இருக்கிறது.

தனி மாந்தர் மரபுகள் முன்னின்று ஆளும் முடியாட்சியிலிருந்து விலகிச் சிற்சில கொள்கைகளை முன்னெடுத்துக் கொண்ட குழுக்கள் என்ற கட்சிகள், கொள்கைகளின் அடிப்படையில் தமக்கு மக்கள் வரவைத் தேடத் தொடங்கின.

ஆனால், பொதுமக்களோ கொள்கைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் அளவில் கல்வி பெற்றவர்களாகவோ எண்ணுந்திறன் பெற்றவர்களாகவோ இல்லை.

இதையும் தங்களுக்குச் சார்பாகப் பயன்படுத்திய கட்சிகள் பொதுமக்களுக்குக் கவர்ச்சியூட்டக்கூடிய உறுதி மொழிகளைத் தேர்தல் காலத்தில் வழங்குவது, கட்சிக்குள்ளிருக்கும் தனி மாந்தர்களின் உயர்தன்மைகளை வெளிப்படுத்திக்காட்டுவது; தேர்தல் காலக் கையூட்டுகளை அறிமுகப்படுத்துவது போன்ற அளவில் மக்களாட்சி முறையை மிகவும் தாழ்த்தின. குடியரசு அமைப்பு அறிமுகப் படுத்தப்பட்ட குறைவான நாட்களிலேயே அது இத் தோல்வியைத் தழுவியது. கட்சிகள் கொள்கை அடிப்படையிலிருந்து தனிமாந்த வழிபாட்டிற்கு இடம் கொடுத்தன. ஆட்சி தனி மாந்தர்களின் கையிலேயே போய் விழுந்தது. அவ்வாறாயினும் அந்தத் தனிமாந்தர்கள் கொள்கைப் பிடிப்புள்ளவர்களாகவே இருந்தனர். கொள்கைப் பிடிப்புள்ள தலைவர்கள் மக்களுக்குக் கவர்ச்சியூட்டக் கூடியவர்களாக இருக்க இயலவில்லை. எனவே கட்சிக்குள் கட்சியை நடத்திச் செல்ல கொள்கையாளர்களும் புறக் கவர்ச்சிக் கென்றே தலைவர்கள் சிலரும் உருவாயினர். புறக் கவர்ச்சிக்குத் திரைப்படம் மிகவும் துணைபோனது. திரைப்படத்தில் உள்ள உயர்மாந்தர்கள் கட்சிக்குள்ளும் பின் குமுகத்திற் குள்ளும் அதே அளவிற்கு உயர்மாந்தர்களாகத் தோற்றமளித்தனர்.

நாளடைவில் கொள்கையாளர்களுக்கு உள்ள மதிப்புக் குறைந்து, புறக்கவர்ச்சியாளர் கைக்குக் கட்சியும் ஆட்சியும் மாறின.

ஒவ்வொரு கட்சியிலும் புறக்கவர்ச்சியால் தோன்ற இவர்களின் பாதுகாப்புக்கு அடியாட்கள் தேவைப்பட்டனர்.

இப்போது கட்சியின் வலுவே கொள்கைகள் என்ற நிலைமாறிக் கட் சியின் சொத்து, அடியாட்கள் என்ற நிலை உருவானது. எந்தக் கட்சி பணவலு நிரம்பப் பெற்றுள்ளதோ. அடியாட்களை மிகுதியாகக் கொண்டுள்ளதோ அந்தக் கட்சி தான் ஆட்சிக்கு வரமுடியும் என்ற நிலை உருவானது.

எனவேதான், கொள்கைகளைக்கொண்டு ஒரு கட்சி மக்களிடத்தில் ஆதரவு தேட முடியவில்லை. தேர்தலில் வெற்றிபெறப் பண வலுவும், அடியாட்களும் தேவைப்படுவதால் கொள்கைகள் வேறுபட்டாலும் கூட்டணிகள் அமையத் தொடங்கின. கூட்டணி என்பதே இரண்டுக்கு மேற்பட்ட கட்சிகளின் பணக்கூட்டும், அடியாட் கள் கூட்டும்தான். இக்கூட்டுகள் எவ்வாறேனும் சேர்ந்து ஆட்சியைத் தட்டிச்செல்வது என்ற ஒன்றையே பொது நோக்கமாகக் கொண்டன. அடியாட்களே ஆட்சியை அமைக்கும் தொண்டர்கள்.

அடியாட்களுக்கு அதிகாரங்கள் அதிகமாயின. ஆளுங்கட்சி அடியாட்கள் குழு சீருடையணியாத காவல்துறை போல் இயங்குகிறது. பொது மக்களிடை வன்முறை ஆளுமைகள் ஏவப்படுகின்றன. காவல்துறையும் இதற்குத் துணை நிற்கின்றது. இதே நேரத்தில் காவல் துறை சீருடையணிந்த அடியாட்களாகவும் இயங்குவதைக் காணலாம்.

இப்போது அடியாட்கள் தேர்தலிலும் நிற்கின்றனர்; அமைச்சர்கள் ஆகின்றனர். மனம் போன போக்கில் துய்க்கின்றனர். இந்த அடியாட்குழுவில் அனைத்துச் சாதியைச் சார்ந்தவர்களும் மதத்தைச் சார்ந்தவர்களும் உள்ளனர். சாதி சமய ஏற்றத்தாழ்வற்ற குமுகாயம் இந்த அடியாட்குமுகாயம். இது ஒரு தனிச் சாதியாகவே வளரும் அளவிற்குப் பெருத்து வருகிறது.

இக்கூட்டம் ஒரு காலத்தில் கருவியாக இருந்து, இப்போது கருவாகவே ஆகி வருகிறது. பணிஞர்களாக இருந்தவர்கள் இப்போது பணமுதலைகளாகவே ஆகிவிட்டனர். இன்றைக்கு இவர்கள்தாம் ஆட்சியை உறுதிப்படுத்துகின்றனர். இவர்கள்தாம் இப்போது நாட்டின் எடுத்துக்காட்டு மாந்தர்கள். தமிழினத்தின் எடுத்துக் காட்டுகள் (!)

அரசியல் தெளியா மாந்தரிங் கொருபால்;
அறம் பிழை வாணிகர் ஒருபால்;
வரவியல் செலவியல் அறிகிலர் ஒருபால்;
வருவதை முடக்குவர் ஒருபால்;
கரவுளம் ஒருபால்; குலவெறி வளர்க்கும்
கயவரும், களியரும் ஒருபால்;
இரவினும் திண்ணிய மடமை கொள்நாடே
எங்கொளி பெறுகுவ தினியே!

(பாவலரேறு - கனிச்சாறு)

சாதியா?.... ஜாதியா?....

ப..அருளி, ஆய்வறிஞர்
தூய தமிழ்- சொல்லாக்க அகரமுதலிகள் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம் . தஞ்சாவூர்

யா = சேர், கூடு, திரள், பெருகு.

யா> ஆ. [ஒ.நோ: யானை > ஆனை. யாசை> ஆசை. யாடு> ஆடு]

ஆ = சேர், கூடு , திரள், பெருகு.

ஆகு>(Latin) aego = to increase, enlarge, to grow become greater (Latin) augesco= to begin to grow, to grow augmen = an increase, growth.

[தமிழினின்று பெற்ற இலத்தீன augeo உருவாக்கிய ஆங்கிலச் சொற்களிற் சில: augment, augmentation, august, author, authority, authorize, auxanometer, auxiliary, auxin ,,,,]

ஆ+அர்> ஆஅர்> ஆர் = சேர், கூடு, நிறை, திரள்

ஆர்> சார் = கூடு, செறி, ஒன்று, இணை.

சார்> சார்+வு> சார்வு> சார்பு= துணை [குறள்கள்:wp,449,900]

சார்தரு= பற்றுகின்ற, இணைகின்ற (குறள்: 354)

சாரா= பொருந்தாத (குறள்: 194) சேராத (குறள்கள் : 815, 1047)

(ஆர்> சார் என்றவாறு திரிபாக்கம் பெற்றமை, முதன்மிகை (Prothesis) என்னும் ஒலியியல் நெறிப்பட்ட வகைமாற்றமாகும்.

ஒ.நோ: அமம்> சமம். ஆன்றோர்> சான்றோர்

அமையம் > சமையம்> சமயம் . அமர்> சமர்.]

சார் + து > சார்+(த்)+து> சார்த்து = கூட்டு, பொருத்து

(ஒ.நோ. கதவைச் சார்த்து = கதவைப் பொருந்துமாறு மூடு)

சார்ந்து = கலந்து கூடி"நல்லெழில் மார்பனைச்சார்ந்து" (கலி:142)

சார்தல்= அடுத்தல். "கடல்சார்ந்து மின்னீர் பிறக்கும் (நால 4:245)

சார்+(த்)+து> சார்த்து = கூட்டம் . சார்த்து > சாத்து = கூட்டம்

'சுரிவளைச் சாத்து' (கல்லாடம்: 63:32)

"சாத்து" - என்னும் சொல்லுக்குத் "திரள்" என்றவாறு நச்சினார்க்கினியர் பொருள் வரைந்துள்ளமை ஈண்டு நன்கு நினையத்தக்கது.

"சாத்தொடு வழங்கும் உல்குடைப் பெருவழி" (பெரும்பாண்:80-81)

ஆறலை கள்வர்களான வம்பலரின் வழி மறிப்புக்கும் வலியப்பறிப்புக்கும் அஞ்சிய பண்டைக்கால வணிகர்கள்- தம் பொருள்களுக்கும் உயிர்களுக்குமான காப்புநிலைக்கெனத் தாம் பலரும் குழுவாக ஒன்றிச் சென்றே பல்லிடங்களிலும் வாணிகத்தில் ஈடுபடலாயினர்.

சாத்து = வணிகர் கூட்டம்

1. " அதர் கெடுத்து அலறிய சாத்தொடு " (அகம்: 39:10)

2. " உமண் சாத்து இறந்த ஒழிகல் அடுப்பின்" (அகம்: 119:7)

3. " சாத்து எறிந்து அதர்கூட்டு உண்ணும் "(அகம்: 167:7-8)

சாத்து + அன்> சாத்துவன் = வணிகன்

மா+ சாத்துவன்> மாசாத்துவன்> மாசாத்துவான் = பெருவணிகன்.

வணிக மரபினருள், சிலர் தம் மக்களுக்கு இதனை இயற்பெயராகவும் இட்டுள்ளமையைச் கோவலன் தந்தை மாசாத்துவானின் பெயராலும் அறியலாம். "வருநிதி பிறர்க்கு ஆர்த்தும் மாசாத்துவான் என்பான்" (சிலம்பு: 1:1:33)

சாத்து + அன்> சாத்தன் = வணிகன், வணிகக் குழுவில் ஒருவன், வணிகக் குழுவினரின் தலைவன்.

(இப்பெயர் அக்காலத்தில் மிகப் பரவலான வழக்கத்திலிருந்து, இயற்பெயராகவே பயிலப்பெற்றுப் பரந்த வழக்காறு கொண்டிருந்தமையைக், கீரன் என்னும் பாண்டியன் ஒருவனின் மகன்- கீரஞ்சாத்தன் என்னும் பெயராற் சுட்டப்பெறுவதாலும் (காண்க: "உண்மென இரக்கும் பெரும்பெயர்ச் சாத்தன் (புறம் : 178 :5) ஒல்லையூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன் என்னும் பெயராற் குறிக்கப்பெறுவதாலும் (காண்க: "ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த வல்வேற் சாத்தன்" (புறம்: 242:4-5) அதே பெயரில் சோழநாட்டுப் பிடவூர்கிழான் மகன் அழைக்கப்பெறுவதாலும் (காண்க: "நெடுங்கை வேண்மாண் அருங்கடிப் பிடவூர் அறப் பெயர் சாத்தன் " (புறம்: 395: 21-22) தெளிவாக அறியமுடிகின்றது.

மேலும், வணிகருக்குள்ளேயே பலர் பெரும்புலவராயிருந் துள்ளனர். மதுரைக் கூலவாணிகன் சாத்தனார், - தண்டமிழ்ச் சாத்தன் என்றும் தண்டமிழாசான் சாத்தன் என்றும் இளங்கோவடிகளாற்

சுட்டப்பெறுகின்றார். பெரும்புலமை சான்ற இளங்கோவடிகளாலேயே தண்டமிழ் என்னும் அடைமொழி கொடுக்கப்பெற்று அக் கூலவணிகரான சாத்தனார் சுட்டப் பெறுகின்றமையில் அவரின் புலத்தகுதி புலப்படுகின்றது.

காண்க :

1) "அவனுழையிருந்த தண்டமிழ்ச் சாத்தன் "
(சிலம்பு : பதிகம் : 10)

2) " தண்டமி ழாசான் சாத்தனிஃதுரைக்கும் "
(சிலம்பு:25:66)

சாத்தன் என்பது பொதுப்பெற்ற இயற்பெயர்களுள் ஒன்றாக நிலைபேறு பெற்றிருந்தமை, - அக்காலப் புலவர் பெருமக்களில் பெயர் பெற்று நமக்குத் தெரிவுறுவோரிலேயே பத்தொன்பது எண்ணிக்கையினர் சாத்தன்- சாத்தனார் என்றவாறு பெயர் கொண்டிருந்துள்ளமையிற் புலானாகின்றது.

அவர்களாகுவர்: 1. அழிசி நச்சாத்தனார் 2. ஆடுதுறை மாசாத்தனார் 3. ஆலம்பேரி சாத்தனார் 4. உறையூர்க் கதுவாய்ச் சாத்தனார் 5. உறையூர் முதுகண்ணன் சாத்தனார் 6. ஒக்கூர் மாசாத்தனார் 7. கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார் 8. கருவூர்ச் சேரமான் சாத்தன் 9. கருவூர்ப் பூதஞ்சாத்தனார் 10. சாத்தனார் 11. சீத்தலைச் சாத்தனார் 12. செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தன் 13. தொண்டி ஆமூர்ச் சாத்தனார் 14.பிரான் சாத்தனார் 15. பெருஞ்சாத்தனார் 16. பெருந்தலைச்சாத்தனார் 17. பெருந்தோட் குறுஞ்சாத்தன் 18. பேரி சாத்தனார் 19. மோசி சாத்தனார்.

அக்கால வணிகர்களின் வழிச்செலவிடையில் இராப் போதுகளில் தங்கி ஓய்வெடுக்கவும் பொருள்களைக் காப்பாக வைத்தெடுத்துச் செல்லவும் தமிழகத்தின் பலபகுதிகளில் தங்கிடங்களைக் கட்டிவைத்திருந்தனர். சாத்து ஆகிய வணிகர் கூட்டம் தங்குமிடம், சாத்து + இடம் > சாத்திடம் என்று சுட்டப்பெற்று, அதுவே சாத்திட> சாத்திரம் > சத்திரம் என்றவாறு மருவி வழக்கெழுந்து நின்றுள்ளதாகத் தோன்றுகின்றது.

சாத்திடம் > சாத்திரம் > சத்திரம் என்றாயினமை, டகர> ரகரத் திரிபால் நேர்ந்ததாகலாம் (ஒ. நோ 1. உதவாக் கட்டை உதவாக்கட்டை > உதவாக்கரை. 2. அடுப்பங்கடை > அடுப்பங்கரை]

[ஐயன் > ஐய(ன்) + ஐயப்பன் என்றவாறும், ஐயன் = ஆர்+ ஐயனார்> + அப்பன் = ஐயனாரப்பன் என்றவாறும் கேரள நாட்டில் கடவுள் கருத்தனாகி இன்று வழிபடப்பெறுபவன் அக்கால வணிகர்

குழு ஒன்றன் தலைவனாயிருந்த சாத்தனே என்பதை அதன் வடபால் திரிபான சாஸ்தா என்பதனாலும் அறியலாம்.

சாத்தன்> சாத்த > (சமற்கிருதம்) சாஸ்தா]

சாத்தன் = வணிகர் தெய்வம்

(1) ''ஓர் பாசண்டச் சாத்தற்குப் பாடுகிடந்தாள்'' (சிலம்பு:9:14-15)

(2) "அச் சாத்தன் " (சிலம்பு :9:23) (உரை: சாத்தன் என்னும் அத் தெய்வம்)

வணிகக் கூட்டத்தைக் குறித்த "சாத்து" என்னும் சொல், வடபால் மொழிகள் சிலவற்றில் திரிபெய்தி நிலைத் துள்ளமைக்கான சான்றுகள்:

Pali : saattha	=	caravan (வணிகக் குழு)
Prakrit: saattha	=	caravan
Sindhi: Saathu	=	Caravan
Khetrani dialet of Lahnda: saath	=	caravan (small)
Punjabi : saath	=	company (வணிகக்குழு)
Old Marathi : saathu	=	Company
Old Marathi : saatha	=	a group of people
Gujarathi : Saath; Saathavaara	=	company of travellers.

வணிகர் கூட்டத் தலைவனுக்குரிய சாத்தன் - சாத்துவன் ஆகிய சொற்கள் வடபால் மொழிகள் சிலவற்றில் திரிபெய்தி நிலைத் துள்ளமைக்கான சான்றுகள்:

Sanskrit: saa thavaaha	=	Caravan leader
Pali: satthavaaha	=	caravan leader
Prakrit: sattaaha, satthavaha	=	caravan leader
Bihari : saatha	=	fellow traveller
Old Gujarathi: saathavaaha	=	caravan leader
Sinhalese : saathva	=	merchant
Marathi : saath	=	partner
Punjabi: saathan	=	companion

Pali: saattika : belonging to caravan

[சாத்துவன் என்பதன் பிராகிருதத் திரிபாகிய சாத்தவாக என்னும் பயில்வு, - சாத்தனாராகிய தெய்வத்தையும் குறித்து வழங்கியிருக்க

வேண்டும் ! சாத்தவாகனன் என்னும் சொல்லைக் குறிப்பிட்டு- ஐயனார் என்றவாறு திவாகரர் திவாகர நூலுள் பதிவு செய்துள்ளமையை இதனோடு ஒப்பக் கருதலாம்.)

சாத்து = குழு, கூட்டம்

சாத்து + இ > சாத்தி > சாதி = குழு, கூட்டம் , தொகுதி , இனம்.

(சாத்தி > சாதி என்றவாறாயினமை - இடைக்குறை என்னும் ஒலியியல் திரிபால் நேர்ந்ததாகும்.)

(ஒ.நோ. முத்து > முது.

வித்து > விது. (விது + ஐ > விதை = வித்து.)

சாதி = கூட்டம் ; ஒரு - வகைப்பிரிவின் திரள்

(1) " நீர்வாழ் சாதியும் அது பெறற் குரிய " (தொல்மரபி.44)

(2) " நீர்வாழ் சாதியுள் நந்தும் நாகே " (தொல்மரபி: 64)

(3) " பறவைச் சாதியன்ன" (பெரும்பாணாற்றுப்படை: 229)

சாதி - பிரிவின் தொகுதி, வகை.

"அகநிலை மருதமும் புறநிலை மருதமும்
அருகியல் மருதமும் பெருகியல் மருதமும்
நால்வகைச் சாதியும் நலம்பெற நோக்கி" (சிலம்பு: 8:39-41)

(பாலையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், செவ்வழியாழ் ஆகியவற்றின் திறன்களும் திறத்தின் வகைகளும் நான்கு வகைகளாய்ப் பிரிவெய்துவன. இந்நான்கு வகைகளே நால்வகைச் சாதிகள் என்றவாறு பாகுபாடெய்தி பண்டையில் பயில்வுற்றன.)

சாதி - என்பது கூட்டம், திரள், ஒன்றன் இனம், ஒன்றன் இனப்பிரிவு, வகை என்னும் பொதுவகைப் பொருள்களிலேயே கடைக்கழகக் காலத்தில் பயிலப்பெற்றது. இம் மேற்குறித்த எல்லை அளவிலேயே 'சாதி' என்பது தமிழ்ச்சொல் என்னும் தகைமையொடு மாசுமருவின்றி நிற்கின்றது.

'அய்த்தரிய பிராமணம்' என்னும் நூலுள் பிறப்பு என்னும் பொருளிலும் - 'மனு தரும சூத்திரம்' என்னும் நூலுள் பிறப்பு அடிப்படையிலான இனப்பிரிவு என்னும் பொருளிலும் ஆரியப் பிராமணரால் திட்டமிட்டு உருவாக்கி நிறுத்தப்பட்ட சொல்லான 'ஜாதி' என்பது, - படிப்படியே 'சாதி' என்னும் கூட்டம், கூட்டப்பிரிவு

என்றவாறான பொருட்பாடுகளடங்கிய மாசுமருவற்ற செந்தமிழ்ச் சொல் ஊடாகக் கலங்க அடிக்கப்பட்டது!

அடிப்படைச் சிக்கற்பகுதியில் நேர்பண்ணப்பெற்ற இவ் அழுக்கூற்று நிலையை உணராத -தெளியாத பண்டைய மேம்போக்குப் புலவர்களிற் பலர் வடசொற்கிளவியை வடவெழுத்து ஒருவி (நீக்கி) நம் எழுத்து கொண்டு புணர்த்திச் சொல்லாக்கி மருவுவித்து மயங்கி மயக்கி மகிழ்ந்து மாழ்கினர்.

இவ்வகை இழிமயக்கத்தை உருவாக்கிய முதலவர்களில் இளம்பூரணரையும் பேராசிரியரையுங்கூட இணைத்துக் கருதலாம். ஏனெனில்- மனுதருமச் சூத்திரப் பேய்நூல் தம் கருத்துக்களால் தமிழர்களைச் சிதைவித்துச் சீழ்த்த காலத்தில் பன்னிலை நூல்களையும் முற்றக் கற்று அவற்றுள் முங்கியெழுந்தவர்கள் இவர்கள் ! இவற்றில் சிலவற்றால் இவர்கள் பெற்ற உள்ளச் சிதைவும் இவர்கள் செய்த் சீர்த்தி வினைகளுக்குள்ளீடாகச் சில்லிடங்களில் சீழ்கொண்டு நின்றன!

தமிழ மாந்தரை நிலத்தாற் பிரித்து வகைப்படுத்தி நின்ற மரபே இம்மண்ணில் பண்டையில் நிலவியது! தொழில் நிலை கருதி, நான்கு பெரும் பிரிவினராகப் பிரித்துப் பார்த்துச் சுட்டிய சூழலே இங்குத் தங்கியிருந்தது! ஒரு மரத்தில் பிரிவெய்தித் தழைத்து நின்ற கிளைகள் அமைப்பைப்போன்றதே, அந்நிலை! அந்தணர்-அரசர்-வணிகர்-வேளாளர்- ஆகிய நாற்பெரும் பிரிவுகளும் தமிழவர் தாமே பகுத்துக் கொண்டு வழங்கிய பாகுபாடுகள்தாம்! இதில் எள்ளளவும் ஐயமில்லை! அந்தணன் தனியான குலப்பிரிவினன் அல்லன்! மற்றைய மூன்று பெரும் பிரிவுகளினின்று துறவியாக எழுந்து தனித்து மக்களுக்கான அறநலம் நோக்கிப் பிரிந்தவன், அவன்.

அம்+தண்ணன்> அந்தண்ணன்> அந்தணன் = அழகருமை சான்ற குளிர்ச்சிமிக்க அறநெஞ்சத்தவன் என்றவாறான பொருட்பாட்டுச் செஞ்சொல் இது ! தூய துறவிக்கென வழங்கப்பெற்ற செவ்விலக்கியத் தகைமைசான்ற இனிய சிறப்புப் பெயரீடு, இது!

தவவேடம் தாங்கி வந்த போலித் துறவியரான ஆரியப் பிராமணர் தமிழத் துறவிகட்கேயுரியதாயிருந்து பயிலப்பெற்ற 'அந்தணர்' என்னும் சிறப்புப் பெயரைத் தம் சூழ்ச்சிக்கரவுத் திறத்தால் தமக்குரியதாக வழங்குமாறு செய்து கொண்டனர்! வந்தேறிய காலத்தினின்று ஆயிரமாண்டிற்கும் மேலாகப் பல்வேறு இறைச்சி யுணவுகளை நன்று மென்று தின்று திணித்து வந்த இப் பிராமணக் கூட்டம் - அந்தணர் என்னும் இச் செந்தண்மைச் சொல்லைப் பற்றிப்

பிடித்ததைப் பொறாது அக்காலப் புலச்சான்றோருள் பெருந்தகைமை சான்றிருந்த திருவள்ளுவர் பெருமான் சிவந்தெழுந்து,

'அந்தணர் என்போர் அறவோர் மற் றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்"(குறள் : 30) என்றவாறு குறளிற் குறித்துக் கூறு காட்டினார். இவர் இக்கருத்தைத் தம் திருமறையினுள் அருமறைவாகக் கூறுகின்ற அளவில், அக்காலத் தமிழரசர்களின் அடிமடிகளில் பிராமணர்கூட்டம் மடிசார் புரட்சியை மலர்த்திக் கொண்டிருந்த காலம், அது! ஆரிய இனத்தையே அரசவகையினர் ஆரத் தழுவி மயங்கிக் கிடக்கத் தொடங்கிய மங்குல்காலம், அது!

"ஐயர்"-எனும் அரிய தூயதமிழ்ச் சொல்லையும் தம் வயப்படுத்திக் கொள்ளத் தொடங்கிய காலம், அது! தலைவர் - பெரியோர் - சான்றோர்- உயர்ந்தோர் என்றவாறான உயராட்சிகளில் ஓங்கி வழங்கப்பெற்ற அதனையும் பற்றித் தொற்றிப் பயிலச் செய்து பழக்கமாக்கி நிலை நிறுத்திவிட்ட ஆரியத்திறம் மிகவும் வியப்பானதுதான்!...

(இவ் ஐயன் என்னும் சொல்தான் - உலக மூலை முடுக்குகளில் சென்று திரிந்து முன்மிகை பெற்று (Prothesis) இங்கு ஆங்கிலேயரோடு மீண்டு வந்து "Sir" சார்- என்றவாறு சந்தி சாலைகளிலும் கூடச் சதிராடு கின்றது.

(ஒ.நோ: பஞ்சு > Sponge . பொட்டு > Spot)

ஐயர் > (Roman) Seior> (Old French) Sieire, sire > Sire > Sir (English) sire > sir

(இந்த 'sir'- ஐத் தான், இந்தியநாட்டுள் சிறந்தாரெனச் சிலருக்கு இங்கிலாந்துக்காரன் இங்கு வந்து பட்டமாக நம்மவருக்கே கட்டி மகிழ்வித்தான்!]

ஒரே குலமாக இருந்த தமிழினம் - தொழிற் பாகுபாட்டு இயக்கநிலையில் நான்கு பிரிவாகக் கருதப்பெற்றுச் சுட்டப்பெற்ற இயற்கைநிலை, ஆரியர் வருகைக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கும் முற்பட்டதாகும். அந்தணர் -அரசர்- வணிகர் - வேளாளர் என்னும் நாற்பெரும் வகுப்புகளுக்கும் ஆரியப் பிராமணர், பிராமணர்- சத்திரியர்- வைசியர்- சூத்திரர் என்றவாறு மாற்றுப்பெயர் கொடுத்து நுட்பமாக மாற்றியதோடு - அவை பன்னூறு பிரிவுகளாகப் பல்கி நிலைத்துக் கிடப்பதற்காகக் குலவொழுக்கக் கட்டுப்பாடுகளையும் நுட்பமாக வரையறுத்து விட்டனர்.

சூத்திரன் என்னும் சொல்லுக்குரிய பொருள்கள் எவையெனத் தெரியுமா? மனுதரும சாத்திர நூலின் பொருட்பிரிவு- 3-இல் சொலவகம் 415 -இல் இவ்வாறு தரப்பெற்றுள்ளது.

சூத்திரன் : 1. போரில் புறங்காட்டி ஓடுபவன். 2. போரில் தளையாளியாகப் (கைதி) பிடிக்கப்பட்டவன் 3. பிராமணனிடத் தில் பத்தியோடு ஊழியஞ்செய்கிறவன் 4. பரத்தையின்(வேசி) மகன் 5.விலைக்கு வாங்கப்பட்டவன் 6. ஒருவனால் கொடுக்கப் பட்டவன் 7. தலைமுறை தலைமுறையாக ஊழியம் செய்கிறவன்.

இவ் ஏழு பொருள்களைக் கொண்ட சூத்திரப் பட்டத்தைச் சுமந்த 90% தமிழர்களுக்கு விழிப்பு வந்ததா? அப்படி, வந்துவிடவே முடியாதபடி மிகக் கரவான தொடர்வினைகளில் ஆரியப் பிராமணர்கள் அயராது அலுங்காது குலுங்காது இயங்கும் முறைகள் மிகமிக வியப்பானவை!

குலவொருமைக் கூட்டைக் குலைக்கத் தமிழர்களுக்குள் பிறவிக் குலப் பிரிவினைகளை உருவாக்கி நீடுநிறுத்திய ஆரியரின் சூழ்ச்சி,- அவர்களே நினைத்துப் பார்க்கமுடியாத அளவிற்கு வெற்றிகண்டுவிட்டமையை வெறிகொண்ட தமிழகமெங்கும் இன்று பரவலாகக் காணுகின்றோம்! சில ஆண்டுகளுக்கும் முன்னர்- நாடார் சிறப்பிதழ், செட்டியார் சிறப்பிதழ் என்றவாறு பல்வேறு குல வகுப்பார்க்குமாகத் தனித்தனிச் சிறப்பிதழ்களை வெளியிட்ட தினமணியின் பாங்கிலும்- பழைய காலப் போங்குமுறை ஊடுருவி யிருந்தமை தெளிந்த குமுகச் சிந்தனையாளர்க்கே விளங்கித் தோன்றவல்லது. அவ்வகை வெளியீடுகளிலுள்ள ஆரிய நச்சுத் தன்மையைப் பொதுவினார் அவ்வளவு எளிதாக விளங்கிக்கொள்ள முடியாது.

'ஜாதி'க்குரிய நச்சுப்பொருண்மை சாதியினுள் செலுத்தப் பட்டது. சாதியானது சாயம் வேறுபட்டுச் சதிராட்டம் போட்டது. படிப்படியே இத் தமிழகத்தில் இன்று பேயாட்டம் ஆடுகின்றது! கல்லாதவனின் நெஞ்சில் உள்ளதற்கும் மேலான அளவுக்கு மேல்-கீழ் என்னும் எண்ணம் ஏறியாடும் குலவகுப்புப் பற்றிய மனக்கொழுப்பும், கரவும், கீழான கயமையும்- கற்ற மடயர்கள் பெரும்பாலானவர்களின் கருத்த நெஞ்சில் காழ்த்தும் (முற்றியும்) சீழ்த்தும் (சீழ்கொண்டும்) பூழ்த்தும் (புழுத்தும்) நெளிகின்றன!

வேளாளன் என்னும் பழந்தமிழ்க் குலவகுப்பில் -பண்டைக் காலத்தில் தச்சனும் அடங்குவான்; கொத்தனும் அடங்குவான்; கொல்லனும் அடங்குவான்! உழைக்கும் பிரிவினருள் பெரும்பாலரும்

அதனுள் அடங்குவர். ஆரியரின் கய்மையால் - உழவரைத் தவிர்த்த மற்றையோர் தனித்தனிக் குலவகுப்பாராகக் குலைந்தனர். தொழிற் குலங்களாக நின்றவர்கள் தொழில் வழியான 'ஜாதி'யாராகினர்! தொழில்களில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் வேறுபாட்டைப் பிராமணன் வகுத்துப் பிரிக்கையில் சினந்த திருவள்ளுவர், "சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்று நம் தமிழ மடமக்களை நோக்கி அறிவுறுத்தியும் பார்த்தார்! எதுவும் எடுபடவில்லை!...' 'ஜாதி'யைத் தவிர!... அது எடுபட்டு எழுந்து எட்டுத் திசையிலும் எகிறி எம்பி எக்காளம் இட்டு ஏறிநின்று தமிழகமே நாறிநிற்கின்ற அளவில் நாற்று நட்டது!

சில அடிப்படையான தொழில்களில் தொடர்ந்து தோய்ந்து மரபூறி வந்த மறத்தமிழ் உயர்மக்களின் கூட்டத்தை ஆங்காங்கும் வேறுபிரித்துக் கூறுகூறாக அப்புறப்படுத்திப் புறமாக்கிய கொடுமையைப் பல்வேறு 'ஜாதி'களும் ஒன்றி நின்று செய்தன! உலகமறியாத சூழ்ச்சியறியாத அத்தொழிற் குலத்தினர் பணிந்து பணிந்து ஒடுங்கியொடுங்கி ஒதுங்கியொதுங்கி உலைந்து உலைந்து உள்ளுருகியவாறே குமுறியவாறே குமைந்தவாறே ஓரமாயினர்!

நான் அந்தச் சாதியைவிட- அல்லது - அச்சாதிகளைவிட உயர்சாதிக்காரன் என்று கருதும் அருவெறுப்புடைய வெற்றுத் திமிரை ஒவ்வொரு குலவகுப்பானிடமும் செறிவார வளர்த்தெடுத்தமை- பிராமணியத்தின் வெற்றிக் கொடுமுடியான செயற்பாடுகளுள் ஒன்று! இத் தன்மை அனைத்து ஆளுமைச் சாதியினிடமும் அகலாது ஆழமாக நிலைகுத்தி நீக்கமுற நிற்கின்றது! தன்னினும் தாழ்ந்த சாதிக்காரனாகப் பிறிதொருவனைக் கருதிப் பார்த்து உள்ளுக்குள் பெருமிதமாகப்(!) பீற்றிக்கொள்ளும் பீத்தைப் போக்கில்தான் - இந் நாட்டில் சாதிகளே உயிர்த்துக் கொண்டுள்ளன!

வரலாறறியாத மாந்தநேயங்கெட்ட ஒவ்வொரு மடயனின் நெஞ்சிலும் மூளையிலும் அடைவுற்றுள்ள சாதிமுட்டையின் மேல்ஓட்டில் இத்தகைய சக்கரையுணர்ச்சி ஆரியத்தால் நன்றாக முழுமையாகப் பூசப்பட்டுக் கிடக்கின்றது! அடிநிலையில் ஒடுக்கப்பட்டிருக்கும் தோழன்ஒருவன் நெஞ்சில் உள்ள சாதி முட்டையிலுங்கூட இச் சக்கரைக் கூறு உண்டு! எனவேதான், ஒடுக்குண்டு கிடக்கும் பகுதிகளிலும்-பிரிவுகளும் பிளவுகளும் - பீற்றல்களும்- பிதற்றல்களுமாகச் சிதறிக்கிடக்கின்றன!

நான்காம் (சாதியாக்கப்பட்ட) வகுப்பாக்கப்பட்ட பெரும் பான்மைத் தமிழர்கள் ஆரியப்பிராமணராகிய அயலவரின் கூற்றுப் படி- பரத்தையரின் பிள்ளைகள்!... (பச்சையாகவும் கொச்சையாகவும்

வெளிப்படையாகச் சொன்னால் தேவ்டியாப்பிள்ளைகள்!...) அதனைத் தம் கழுத்தில் தொங்கவிட்டுக்கொண்டே தம்மினுந் தாழ்த்திய- தமிழினப் பிரிவாருள் ஒரு சாராரை ஆங்காங்கும் மாந்தநேயங்கெட்டு மக்கட்பண்பிழந்து ஒடுக்கி ஐந்தாம்வகுப்பாராக்கி (பஞ்சமராக்கி) அகமகிழ்ந்தனர்! தொடர்ந்து மடத்தனமாக மகிழ்ந்தும் வருகின்றனர்! காலம் வளர வளரக் காழ்ப்பும் வளர்ந்து மனக்கோணல் மல்கி அவ்வொடுக்கப்பட்டவர்களைச் சாதிக்குள்ளேயே சேர்க்கக்கூடாது; -அவர்களுக்குச் சாதி என்ற ஒன்றே கிடையாது!... அதாவது, சாதியற்ற சாதியினர் அவர்கள் என்றவாறு ஒதுக்கியொடுக்கி வெற்றுப் பெருமித வீம்புப் புழுநெளியும் நெஞ்சினராகி வீறினர்!...

இத் தொடர்குலைவு வளர்ச்சிப்போக்கை ஆழ்ந்து கூர்ந்து ஆர்வ வெறியுடன் நோக்கி வந்த ஆரியக்கும்பலும் அடிமைத் தமிழ்க்கும் பலும் ஒன்றுசேர்ந்து சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியில் (பக்கம் :1757) 'தமிழன்' என்னும் சொல்லுக்குரிய பொருள்களிலொன்றாகப் - 'பறையனொழிந்த தமிழ்ச்சாதியான், எனப் பளிச்சென அச்சிட்டுப் பரப்பியது; அண்மையில், அதனை மீண்டும் மறுபதிப்பிட்டது. ' பறையன் தவிர்த்த'என்றுங் கூறாது- பறையன் **ஒழிந்த** என்றே பதிப்பித்துள்ளதில் ஆரிய நச்சுக் குறும்பின் முழு ஆழ அகலமும் -தமிழினக் கெடும்புக் குறும்பர்களின் வெறியும் பதிவெய்தியுள்ள மையைக் கூர்ந்து நோக்கின் தெளியப் புலனாகும்.

இப் பதிவுகளை அடியொற்றியே எருதந்துறைப் பல்கலைக்கழக ஆங்கிலச் சிற்றகரமுதலியும் (C.O.D - Eng-Dic) பறையன் என்னும் சொல்லுக்குரிய பொருள்களாக-1. தென்னிந்தியாவின் கீழ்ச்சாதியான் (Member of a low caste in S.India) 2. கீழ்ச்சாதியான் அல்லது சாதியற்றவன் . (Member of low or no caste) 3. (அணிவகையில்) (fig) குமுகத்திலிருந்து தூக்கியெறியப்பட்டவன் என்பவற்றைக் குறித்துள்ளது (பக்கம் 801. பதிப்பு : 6)

ஒடுக்கி வைத்ததினும் கீழ்மையான விலங்குத்தனம் - அவர்களைத் தீண்டவே கூடாது என்னும் வரையறுப்பை வகுத்துக் கொண்டு வாழ்ந்து வந்ததுதான்! காறியுமிழ்ந்து செருப்பாலடித்து வெருட்டியோட்டத் தக்க இக் கொடுங்கடிய காட்டு விலங்காண்டித் தனத்தைச் செயற்பாட்டிற் கடைப் பிடித்துவரும் நாய்மை இன்றும் இன்னும் இத்தமிழகத்தில் தங்கியுள்ளது!...

தமிழ்- தமிழினம் -தமிழ்நாடு என்னும் முந்நிலைகள் பற்றிய வரலாற்று அறிவும்- அவைவழியதான மனத்தெளிவும் நாம் பெறுதல் வேண்டும். அந்நிலையே நம்முள் ஒற்றுமையைக் கூட்டும்; ஓர்மையை ஈட்டும்!

தென்மொழி நாள்காட்டி



இவ்வாண்டுக்குரிய 'தென்மொழி நாள்காட்டி' வெளிவந்துவிட்டது.

பாவலரேறு ஐயா அவர்களின் வீறுரை யாற்றும் தோற்றப் பொலிவு கொண்ட படம் தாங்கி வந்திருக்கிறது.

ஒவ்வொரு மாதத்திற்கும் தனித்தனித் தாளில் தமிழ் ஆங்கில மாதங்கள் இணைந்து அச்சேறியுள்ளது.

தென்மொழி இயக்கக் குறிப்புகள், பாவலரேறு ஐயா அவர்களின் பொதுவாழ்வுக் குறிப்புகள், பிற முகாமையான குறிப்புகள், ஐயா அவர்களின் அருங் கருத்துகள் மற்றும் பா வரிகளில் சிற்சில, பெருமக்கள் பலரின் கருத்துரைகள் முதலியன இந் நாள்காட்டி யில் இடம்பெற்றுள்ளன.

விலை உரு. 12/- (நேரில்)

அஞ்சல் வழிப் பெறுவோர்க்கு – உரு. 15/- பத்துப் படிகளும் அதற்கு மேலும் வாங்குவோர்க்கு 20 விழுக்காடு கழிவு உண்டு. – அமைச்சர், தென்மொழி

சாதி என்னும் தூய செந்தமிழ்ச் சொல்லுக்கு இன்றைக்கு வழங்கிவரும் கொடிய அருவெறுப்புப் பொருண்மை கடைக்கழகக் காலத்தில் (கடைச்சங்க காலத்தில்-) இல்லை; பிறப்படிப்படை யிலானது என்னும் பொருட்பாட்டில் ஆரியப்பிராமணர் உருவாக்கியதே ஜாதி என்பது !... இதற்கும் அதற்கும் தொடர்பில்லை! தொடர்புபடுத்தினான்! தொடர்பு கொண்டோம்! தொடர்ந்த நிலையில்- இனத் தொடர்பாகிய நம் தொடரியே (சங்கிலியே) இன்று அறுந்து தொய்ந்து துவண்டு கிடக்கின்றோம்! தொடர்ந்து சாய்ந்து மடங்கி மாய்ந்து வருகின்றோம்!

இவ் உண்மையுணர்ந்து உருத்தெழ - நமக்கு இன்னும் கருத்தெழ வில்லையே!... பாவலரேறு-ஐயாஅவர்கள் இவ்வாறு நமக்கு உறுத்துமாறு அறிவுறுத்துவார்!...

"சாதிப் புழுக்கள் நெளிந்திடுமோர் – மொத்தைச்
சாணித் திரளையாய் வாழ்கையில் – நாம்
ஒதியுணர்ந்திட்ட மக்களைப் போல் – உல
கோருக்குரைக்கத் துடிக்கிறோம்!

குருடர் காதல்

நாடக ஆசிரியர் : **அதியமான்**

(பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பாவியக் கொத்தில் ஒரு மலர்.)

தாய்மாமன் : நீயா அவளைப் படிக்க வைக்கிறாய்? வெளி நாட்டுக்காரன் ஈந்த பணத்தில் படிக்கிறாள். இந்த நாட்டில் எவனாவது இப்படிச் செய்கிறானா? செர்மன் நாட்டுக்காரன் கொடுக்கும் உதவிப் பணத்தில் படிக்கிறாள். அவளுடைய வாழ்க்கை உரிமை அவளுடைய காதல்.
நீ ஏன் எதிர்க்கிறாய்?

தாய்மாமன் மனைவி : ஐந்து அகவையில் பெற்றோரை இழந்த கழுதை உங்கள் மருமகள். அவளை ஆளாக்கி இத்தனை நாளும் பாதுகாத்துப் படிக்க வைத்ததில் நமக்கென்ன பயன்?

தா.மா: உனக்கென்னடி பயன் வேண்டியதிருக்கிறது?

தா.மா.ம.: இத்தனை ஆண்டுகளாக அவளை வளர்த்ததிற்குப்பயன் வேண்டும். ஒரு பிள்ளையை இவ்வளவு நாளும் பாதுகாத்ததற்கு நான் சொல்வதையே கேட்க வேண்டும்.

தா.மா: ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பது இந்தக் காலத்தில் என்ன எளிதான செயலா? அவனவன் துலாக் கோலைத் (தராசு) தூக்கிக் கொண்டு 'எத்தனை அயிரை எடை (கி லோ) தங்கத்தைத் தருவாய்?' எவ்வளவு பணம் மணக் கொடை (வரதட்சணை) தருவாய்? என்று தெருத்தெருவாய் அலைகிறான். முடுக்கு முடுக்காய்ச் சுற்றுகிறான். என் மருமகளுக்குச் சீர் நீ கொடுப்பாயா?

தா.மா.ம: ஒன்றும் கொடுக்க வேண்டாம். பக்கத்து ஊரில் தங்கத்துரை என்பவனுக்கு இவளைக் கொடுத்தால் போதும். ஆறு திங்களாக அவன் வீட்டார் அலையோ அலையென்று அலைகிறார்கள். பேசாமல் அவனுக்குக் கொடுத்து விடலாம். நிறையச் சொத்துக்கள். ஒரே ஆண். அவன் பெயரும் தங்கத்துரை. தங்கம் அவனுக்குத் தேவையில்லை.

தா.மா.ம: சீ! முட்டாள்! அவனுக்குக் கடுமையான எலும்புருக்கி நோய். கலியாணமான உடன் அவன் மண்டையைப் போட்டுவிடுவான். அவனுக்கா கொடுக்கச் சொல்லுகிறாய்.?

தா.மா.ம: மண்டையைப் போட்டால் போடட்டுமே. அவன்

சொத்தில் முக்கால் பாகத்தை நம் பெயருக்கு எழுதித் தருவதாய்ச் சொல்லுகிறார்கள்.

தா.மா: அவன் செத்தால் சொத்து நமக்குச் சேரும் என்று நினைக்கிறாய். என் மருமகள் நிலை என்னாவது?

தா.மா.ம: இவள் கெட்ட கேட்டுக்குக் கணவன் பக்கத்திலே இருக்க வேண்டுமா? சொத்துக் கிடைக்குமே!

தா.மா: நீ ஒரு பெண்தானே. ஒரு பெண்ணுக்குப் பெண் இரங்க வேண்டியது. அதைவிட்டு விட்டு அவள் வாழ்க்கையைச் சீரழிய விட்டுவிட்டுச் சொத்து சேர்க்க நினைக்கிறாய். அது முடியாது.

தா.மா.ம: அப்படியானால் அவள் விருப்பப்படி விட்டுவிடுவதோ?

தா.மா: ஆமாம். அவளுடைய வாழ்க்கை உரிமை அவளுடைய காதல். இதில் மணக்கொடை செத்துப் போகும். மாண்பான வாழ்க்கையும் அவருக்குக் கிடைக்கும்.

தா.மா.ம: அந்தப் பயல் எந்தச் சாதியோ?

தா.மா: எவனாக இருக்கட்டுமே. அவன் தமிழன்தானே. அதைப்பற்றி நான் கவலைப்படப் போவதில்லை. அவளுடைய காதல் நிறைவேறினால் மணக்கொடையும், சாதியும் தொலைந்து போகும். நல்லது தான்.

தா.மா.ம: உங்களுடைய சீர்திருத்தங்கள் யாவும் உங்களோடு இருக்கட்டும். அது குடும்பத்தில் ஊடாட வேண்டாம். நாளை உங்கள் மருமகளுக்கு அதே மாப்பிள்ளைக்கு உறுதி நாள், வருகிறார்கள்.

(பெற்றோரை இழந்த பெண் தன்னுடைய தாய் மாமனின் மனைவி நோயாளியாக இருக்கும் மணமகனுக்கு அப்பெண்ணைத் திருமணஞ் செய்ய உறுதி செய்யப் போவதை அறிந்து தன் காதலனைச் சந்திக்கிறாள்)

பெ.இ.பெ: *(காதலனைச் சந்தித்து)* என் தாய்மாமனின் மனைவி பணத்திற்காக ஆவல் கொண்டு ஒரு நோயாளியைத் திருமணஞ் செய்து கொள்ளக் கட்டாயப்படுத்தி எனக்குத் திருமண ஏற்பாடுகளை விரைந்து செய்கிறாள். இனி எனக்கு இல்லற வாழ்க்கை வேண்டாம். தற்கொலை செய்து கொள்வேன்.

காத: கேட்டியா? ஏன் தற்கொலை செய்ய வேண்டும்? அத்திருமணத்திற்கு நீ ஒப்புக் கொள்ள வேண்டும். உயிரைப் போக்குவது மடமை!

பெ.இ.பெ: அந்த மணமகன் ஒரு நோயாளியா சாவுபடுக்கையில் இருக்கிறான்.

காத : என்ன சொல்லுகிறாய்? சாவுப் படுக்கையில் இருப்பவனுக்கு திருமணத்தை எப்படி நடத்துவார்கள்?

பெ.இ.பெ: அது வந்து மூடக்கொள்கையை நம்பும் முட்டாள்கள் செய்யும் செயல்!

காத : அப்படி என்றால்?

பெ.இ.பெ : அவன் சாவதற்குள் திருமணம் செய்து கொண்டால்தான் அவனுக்கு மேலுலகம் (மோட்சம்) கிடைக்குமாம். அதற்காக என் வாழ்க்கையைச் சீரழிக்க மூடர்கள் திட்டம் போடுகிறார்கள். அதற்கு என் மாமன் மனைவி ஒத்து ஊதுகிறாள்!

காத : அவன் சாவது உறுதி என்றால் சாகட்டும். அவனுக்கு மேலுலகம் கிடைத்தால் உனக்கு இந்த உலகம் கிடைக்கும்.

பெ.இ.பெ : நான் கைம்பெண்ணாக இருக்கவேண்டுமே!

காத: கைம்பெண்ணாக உயிருடன்தானே இருப்பாய்?

பெ.இ.பெ: அந்த உயிர் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

காத: நீயும் அந்த மூடர்களோடு சேர்ந்தவள்தான். நீ இந்தத் திருமணத்திற்கு ஒப்புக் கொள். உன் கைம்பெண் நிலையை நான் மாற்ற முடியும்.

பெ.இ.பெ: அது எப்படிங்க முடியும்?

காத: முடியும். நீ கைம்பெண் ஆகும் வரை நான் காத்திருப்பேன். அதனால் நேரே இப்போதே சென்று நம்மூர் முச்சந்தியில் இருக்கும் பெரியார் சிலைக்கு ஒரு கும்பிடு போடு. ஐயாவின் கொள்கையைப் பின்பற்றுவேன் என்ற உறுதி மொழியுடன் இத்திருமணத்திற்கு ஒப்புக் கொள். பின்னால் உள்ள நிகழ்ச்சிக்கு நான் பொறுப்பு.

பெ.இ.பெ: நீங்கள் பொறுப்பு என்றால்?

காத : உன்னை மறுமணம் செய்து கொள்வேன்!

பெ.இ.பெ: இதை என்னால் நம்ப முடியவில்லை. நீங்கள் நினைக்கலாம் ஆனால் இந்தக் குமுகாயம் ஏற்றுக் கொள்ளாதே!

காத: அதைப்பற்றிய கவலை நமக்கெதற்கு? நான் உன்னை

ஏற்றுக் கொண்டு வாழ்க்கையை நடத்துவேன். என்னை இந்தக் குமுகம் ஒன்றுஞ் செய்ய முடியாது.

பெ.இ.பெ: உலகத்தோடு ஒட்டி ஒழுகவில்லையென்றால் நாம் எப்படி வாழ முடியும்?

காத: உலகத்தில் உள்ளவர்கள் அனைவரும் ஒரே சீராகவா வாழ்கிறார்கள்? குமுகாயத்தில் ஒரு கூட்டம் கைம்பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதைத் தடைபோடுகிறது. இன்னொரு கூட்டம் அதை ஆதரிக்கிறது. சில ஆண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களைத் திருமணம் செய்து கொள்கிறார்கள். இன்னொன்று உனக்குத் தெரியுமா? சொல்கிறேன்; கேள், வாத்சாயனரின் காமச் சூத்திரம் 'காம விளையாட்டுகளில் ஓர் ஆண் விலைமாதர்களுடன் அல்லது கைம்பெண்களுடன் தன் இன்பத்தைப் பெற்றுக் கொள்வதைக் குமுகச் சட்டங்கள் ஆதரிக்கவும் இல்லை; எதிர்க்கவும் இல்லை' எனக் கூறுகிறது. அதனால் கள்ளத்தனமாக ஒரு கைம்பெண்ணுடன் சேர்வதைக் காட்டிலும் அவளைத் திருமணம் செய்து கொண்டு வாழ்வது தவறில்லையே. மனைவியை இழந்த ஒருவன் மறுமணம் செய்து கொள்கிறான். இந்த ஒழுக்கங்களில் எதைப் பின்பற்றி உலகத்தோடு ஒட்டி வாழ்வது? குமுகாய நலத்திற்காகச் சிந்தித்தவர்களாகிய உயர்ந்தோர் கருத்துப்படி நடப்பதே உலகத்தாரோடு ஒத்துவாழ்வது. நீ கைம் பெண்ஆனால் பெரியோர் கூற்றை ஆதரித்து உன்னை நான் மறுமணம் செய்து கொள்வேன். நீ இப்போது திருமணம் செய்யப் போகிறவன் இறக்கும் வரை நான் காத்திருந்து, உனக்கு வாழ்வளிப்பது என் கடமை. எனவே உயிரைக் காப்பாற்று. திருமணத்திற்கு ஒப்புக் கொள்.

பெ.இ.பெ: பெண்ணாக பிறப்பது தவறு. அப்படிப் பிறந்தாலும் பெற்றோரை இழந்து வாழ்வது அதைவிடப் பெருந்தவறு.

காத: பெண்ணாகப் பிறப்பதும் ஆணாகப் பிறப்பதும் யாருடைய விருப்பமுமில்லை. இயற்கையாக நிகழும் பிறப்பை மாந்தவியல் அறியாத முட்டாள்கள் கட்டுப்பாடுகளை ஓரவஞ்சனையாகப் புகுத்திப் பிறப்பை இழிவுபடுத்துகிறார்கள். வாழ்க்கை வாழ்வதற்கேயன்றிப் பாழாவதற் கன்று; நாம் வாழ்வோம், போ!

காட்சி 2. தொடருகிறது

குருடன் : கடைசியாக அந்தப் பெண் என்ன ஆனாள்?

குருடி : அந்த நோயாளியைத் திருமணஞ் செய்து கொண்டாள்.

அவன் அவளுடைய உடலைத் தொடாமலே மூன்று திங்கள் கழித்து இறந்து போனான்.

குருடன்: சாகாமல் பிழைக்கவா செய்வான்- அப்படியானால் அவள் எதிர்பார்த்தபடி கைம்பெண்ணாக்கப்பட்டாள்?

குருடி: ஆமாம்!

குருடன்: அந்தப் பெற்றோரை இழந்த பெண்ணை அவளுடைய காதலன் சொன்னபடி மணம் செய்து கொண்டானா?

குருடி: இல்லையாம்!

குருடன்: ஐயய்யோ-அட கொடியவனே- அந்தப்பெண் என்ன ஆனாள்?

குருடி: அவளுடைய தாய்மாமன் வீட்டில் நெடுநாள்களாகக் கைம்பெண்ணாகவே இருந்தாள்.

குருடன்: ஓகோ; பிறகு?

குருடி: அந்தப் பெண்ணின் துயரைக் கண்டு மனமிரங்கித் தன் மருமகள்தானே! அவளின் தாய் மாமனே இரண்டாம் திருமணம் செய்து கொண்டான்.

குருடன்: நல்லவேளை:- பிழைத்தாள்.

குருடி: பிழைத்தாளா? நாள்தவறாமல் செத்துச் செத்துப் பிழைக்கிறாள். அவளுடைய தாய்மாமனின் மனைவி அவளைக் கொடுமைப்படுத்து கிறாள். பெற்றோரை இழந்த பெண்ணாக இருந்ததால் மிகுதியாகத் துன்பப்பட்டுக் கொண்டு, எப்படியோ வாழ்வதாய்க் கேள்வி. இப்படி எத்தனையோ பெண்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

திரை

காட்சி 3

உறுப்பினர்கள்: குருடன்- குருடி

இடம் : அதே சாவடி

காலம் : காலை

குருடன் : பெண்ணாகப் பிறந்ததை எண்ணிக் கவலைப்படுகிறாய் இல்லையா?

குருடி: அது மட்டுமல்ல. குருடியாய் வேறு பிறந்து தொலைத்தேன். அதனால் வழியைப் பார்த்து நடக்கவும், என் உடல் எப்படி உள்ளது எனக் காணவும் பார்வையில்லை. பகலும் இரவும் எப்படி இருக்கும் எனத் தெரியாது. உங்களது திருமேனி எப்படி இருக்கும் எனக் கண்டு களிப்போடு பேச நாவு போல், காணக் கண்ணில்லை.

குருடன்: காதலுக்குக் கண்ணில்லை என்பார்கள். என்றாலும் காதல் செய்வதில் குறைவில்லை. உண்ணுவதில் குறைவில்லை, உறங்குவதிலும் குறைவில்லை. காணக் கண் இல்லை; போகட்டும் உன்கருத்தறிய எனக்கு அறிவு இருக்கிறதே, அது போதும்!

குருடி : ஆமாம். ஆமாம்! உங்களைத் தொட்டவுடன் நான் அடையும் இன்பம் இத்தனை நாளும் காணாத பேரொளியாக அன்றோ இருக்கிறது! இந்த ஏழைக் குருடிக்கு நீங்கள் நல்ல துணையாக இருக்கிறீர்கள். என் பக்கம் வாருங்கள்-

குருடன் : *(அவள் பக்கம் நகர்ந்து வந்திருக்க)* எங்கே? உன் மெல்லிய சிறு கை?

குருடி: *(அவன் மார்பைத் தடவி)* கண்ணால் காணாத உங்கள் மார்பை இச்சிறு கையால் தழுவுவதில் நான் நுகரும் இன்பத்திற்கு இணையே இல்லை!

குருடன் : *(அவளை அள்ளி அணைத்திழுத்து)* உன்னைப் பார்க்கமுடியவில்லை. கண்ணில்லாவிட்டாலும் நீ தரும் இன்பத்தைக் கற்கண்டாய் என் உயிர் சுவைக்கிறது.!

காட்சி 4

உறுப்பினர் : குருடி, குருடன்

இடம் : அதே சாவடி

காலம் : காலை

குருடி : என் அன்புக்குரியவரே, நீங்கள் தந்த முத்தத்தால் நான் உங்களுக்கு அத்தை மகளானேன்.

குருடன் : ஆமாம் சரியாகச் சொன்னாய், நான் உனக்கு மாமன் மகனானேன்.

குருடி: அத்தான்! நீங்கள் தந்த முத்தத்தால் நான் முகஞ் சிவந்ததையும் உங்கள் முன் ஓர் ஓவியமாக நிற்பதையும் அறிய முடியாவிட்டாலும் இருவர் உணர்ச்சியும் ஒன்றுபட்டு மெய்சிலிர்க்கிறது.

குருடன் : உண்மை ! நம் காதலை எவராலும் தடுக்க முடியாது. இக்காதலில் செல்வம் குறுக்கிட்டு அன்பைக் குலைக்கவில்லை. சாதி தலையிட்டுக் காதலை மறுக்கவில்லை. இருவருக்கும் கண்ணில்லாததால் என்னைக் கூனென்றும் உன்னை மானென்றும் கூறிக் காதலைப் பழிக்க இடமில்லை. நமக்கு அச்சமும் இல்லை. ஒரு பெண் மணக்கொடையைக் கொண்டுவர அதில் ஒன்று குறைந்து விட்டது எனக்கூறித் துன்புறுத்தும் மாமியுமில்லை. இதைக்கேட்ட என் உடன்பிறந்த தங்கையர் கழுகுப்பார்வை பார்க்கும் கல்நெஞ்சரும் கிடையாது. தாலி கட்டிப் பெண்ணை அடிமையாக்கும் மூடப் பழக்கமுமில்லை. முட்டாள்கள் பேசும் பிறப்பியப்பயன் (சாதகப்பலன்) சொல்ல எவனும் நமக்கு இல்லை. அதனால் புளுகர்கள் நம்மை அண்டவும் மாட்டார்கள். நமக்குத்தான் கொண்டாட்டம்; மூடப்பழக்க வழக்கங்களுக்குத் திண்டாட்டம். அது மட்டுமல்ல, உனக்கு என்மீது அன்பு. எனக்கு உன் மீது அன்பு. எனவே, அன்புள்ளவர்கள் இணைந்ததால் பண்பும் அறனும் சேர்ந்த நம் இல்வாழ்க்கை வளமுடையது.

குருடி: விடிந்து வெகுநேரம் ஆகிவிட்டது. பேசிக் கொண்டே இருக்கிறோம்.

குருடன் : எனக்குப் பார்வையில்லை; உன்னைப் பார்த்து மகிழ. அதனால் பேசுகின்றேன். வா போகலாம், வாழ்க்கையை நடத்தலாம் (எழுந்து முன் நடக்கிறான்)

குருடி: சரி, அப்படி குறைவற்ற அன்புச் செல்வங்களாக நாம் இருவரும் நடப்போம். நில்லுங்கள் அன்பே, உங்கள் தோளைப் பிடித்து நடந்து வருகிறேன்!

(இருவரும் ஒருவர் பின்னால் ஒருவர் நடந்து சென்றனர். கதிரவனும் தன் ஒளியைச் சூடாக வீசினான்.

(திரை) *முற்றும்*

தென்மொழி

தூயதமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
(ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.)

ஆண்டுக்கட்டணம்	உருபா.	48.00
அரையாண்டுக்கட்டணம்	உருபா.	24.00
தனியிதழ்	உருபா.	4.00

வெளிநாட்டுக் கட்டணம்

1. வானூர்திவழி ஆண்டுக்கட்டணம் – 300/-
2. கப்பல்வழி ஆண்டுக்கட்டணம் – 200/-

‘வேறென்ன சொல்வது ?’

○ “பாக்கித்தானுக்கு உரு 1300 கோடிக்கான படைக்கருவிகளை அமெரிக்கா வழங்குவது இந்தியாவுக்குத் தீங்கிழைக்கும் கொடுஞ்செயல்!”

– தலைமையமைச்சர் நரசிம்மராவ்

❑ *தமிழினத்தைப் படுகொலை செய்யும் இலங்கையரசுக்கு இந்திய அரசு உரு100 கோடி வழங்குவது தமிழீழ மக்களுக்குத் தீங்கிழைக்கும் கொடுஞ்செயல் என்று கூறக் கூடாது என்கிறார் பேராயக் கட்சிக்காரர் ஒருவர்!*

○ “இன்றைக்குத் தெளிவாக இருக்கும் கூட்டணி அ.தி.மு.க.- இந்திய யூனியன் முசுலீம்லீக்குக் கூட்டணிதான்!”

–அப்துல் சமது

❑ *எதில் தெளிவு? தொகுதி ஒதுக்கீட்டிலா; ஒதுக்கிய தொகையின் பங்கீட்டிலா என்பதையும் தெளிவுபடுத்திவிட்டால் நல்லது!*

○ “தமிழ்நாட்டில் கோயில் சிலைகளுக்குக் கூடப் பாதுகாப்பு இல்லை!”

–அமைச்சர் நெடுஞ்செழியன்.

❑ *அடுத்து எந்தக்கட்சி ஆட்சியமைத்தாலும், அதிலும் எப்படியாவது அவர் அமைச்சர் பதவி பெற்றால்தான் அவற்றையெல்லாம் காப்பாற்ற முடியமாம்!*

○ தமிழ்மக்கள் மீது எங்களுக்குள்ள ஆழமான நம்பிக்கையின் வெளிப்பாடுதான் ‘தமிழன் எக்சுபிரசு’

–விவேக் கோயங்கா

❑ *“தமிழ்மக்கள்தாம் சரியான ஏமாளிகள் என்ற ஆழமான நம்பிக்கைதானே-?*

❑ *எல்லா வளமுமுடைய தமிழ் இருக்கும் போது தமிழன் பிற மொழிகளைச் சிந்திக்கிறான்!”*

–முன்னாள் அமைச்சர் கா.காளிமுத்து

❑ *அதனால்தான் செயலலிதா ஆட்சியில் ஆங்கில வழிக் கல்விப் பதினிலைப் பள்ளிகளுக்குத் தனி இயக்கமே தொடங்கப்படுகிறது போலும்!*

○ ஐயாயிரத்து நான்கு (இலவச) திருமணம் : மன்னராட்சிக் காலத்தில் கூட நடக்காத பெருவெற்றி! - செயலலிதா பெருமிதம்!

– செய்தி

❑ *மன்னராட்சிக் காலத்தில் அரசு உதவியின்றி, மக்கள் தாங்களே திருமணம் செய்து கொள்ளும் தகுதி வளம் பெற்றிருந்தனர் என்று தெரிகிறது!*

–கடுங்கோ

தொடர் : 3

பாவலரேறு பொதுமையர்

குணா....

1981ஆம் ஆண்டில் பெருஞ்சித்திரனார் தொடங்கிய உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கொள்கைத் தூண்களில் ஒன்றாய்த் 'தமிழ்த் தேசத்துக்குப் பொருந்திய பொதுவுடைமை' என்னும் கொள்கையை வைத்தார். 'முதலில் உன்னை அறி; உன் மொழியை அறி; உன் தமிழ் மக்களை அறி; உன் தமிழ்நாட்டை அறி; அதில் பொதுவுடைமை நலன் சேர் என்பதே அதன் உள்ளீடாகும்.

தமிழகப் பொதுவுடைமையர், முழக்கங்களையே இரவல் வாங்குவதில் பேர்போனவர்கள். அத்தகைய இரவல்களிலெல்லாம் பெரிய இரவல் 'உழுபவனுக்கே நிலம்! 'என்னும் முழக்கம். ஐரோப்பியச் சூழலில் எழுந்த அம்முழக்கம் சீனத்துச் சூழலுக்கும் பெரிதும் பொருந்தியது. ஆனால், தமிழகத்துக்கு அஃது அப்படியே பொருந்தாதென்பதை 11.5.1984 அன்று மதுரை மாவட்டத்து நிலக்கோட்டைக்கு அருகிலுள்ள அணைப்பட்டியில் நடந்த உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் பயிற்சிப் பாசறையில் நான் படித்த தமிழியப் பொதுவுடைமை என்னும் ஆய்வுக் கட்டுரையில் விரிவாக அலசியிருந்தேன்.

தமிழகத்தில் பாட்டம்(வாரம்), குத்தகை என்னும் குடிக்கூலி முறைகள் உண்டு. அவற்றைத் தழுவி, தமிழகத்திலுள்ள நிலக் கைப்பற்றுகள் (Land Holdings) மூவகைப்படும்.

அவை :

(1) சொந்த நிலத்தில் உழுதுண்போரும் உழுவித்துண்போரும்;

(2) பாட்டத்திற்கும் (வாரத்திற்கும்) குத்தகைக்கும் நிலமெடுத்து உழுதுண்போர்;

(3) சொந்த நிலத்துடன்கூடப் பாட்டத்திற்கும்(வாரத்திற்கும்) குத்தகைக்கும் நிலமெடுத்து உழுதுண்போர்.

இவர்களில் சொந்த நிலத்தில் உழுதுண்போரும் உழுவித்துண் போரும் வைத்திருந்த நிலப்பரப்பு, 1970-71 ஆம் ஆண்டுகளில், கடலோரத் தென் மாவட்டங்களில் நூற்றின் மேனிக்கு 88.86 ஆகவும், கடலோர வடமாவட்டங்களில் 88.26 ஆகவும், உள் மாவட்டங்களில் 94.27 ஆகவும் இருந்தது. இவர்களிடமிருந்த மொத்த நிலக் கைப்பற்றுகள் முறையே 89.35%, 91.82%, 94.86% என்றிருந்தன. பாட்டத்திற்கும் (வாரத்திற்கும்) குத்தகைக்கும் நிலமெடுத்து உழுதுண்போர் வைத்திருந்த நிலப்பரப்பு

கடலோரத் தென்மாவட்டங்களில் 5.15% என்றும், கடலோர வடமாவட்டங்களில் 2.48% என்றும், உள்மாவட்டங்களில் 2.20% என்றும் இருந்தது. இவர்களிடமிருந்து மொத்தக் கைப்பற்றுகள் முறையே 7.01%, 3.16%, 3.05% ஆகும். தமிழகத்தில் சொந்த நிலத்துடன்கூடப் பாட்டத்திற்கும் (வாரத்திற்கும்) குத்தகைக்கும் நிலமெடுத்து உழுதுண்போர் வைத்திருந்த பரப்பளவு, கடலோரத் தென்மாவட்டங்களில் 5.99% ஆகவும், கடலோர வடமாவட்டங்களில் 9.26% ஆகவும், உள் மாவட்டங்களில் 3.53% ஆகவும் இருந்தது. அவர்களிடமிருந்து கைப்பற்றுகள் முறையே 3.64%, 5.02%, 2.09% ஆகும்.

தமிழகத்தில் தொன்றுதொட்டு வந்த காணியாட்சி முறையை ஒழித்துவிட்டு வேளாண்வகை (அரயத்துவாரி) முறையைத் தாமசு மன்றோ புகுத்தியதால் தமிழகத்தின் நிலக் கைப்பற்றுகள் சின்னஞ் சிறு கூறுகளாகின. இந்நிலையில், தமிழகத்தில் சொந்த நிலத்தில் உழுதுண்போரும் உழுவித்துண்போருமே சராசரி நூற்றில் 88 விழுக்காட்டினருக்கும் மேலானவராவர். இவர்களில், வந்தேறிகள் பெரும் பங்கினர். இதுபோக, சொந்த நிலம் வைத்திருப்போரும் பாட்டத்திற்கும்(வாரத்திற்கும்) குத்தகைக்கும் நிலமெடுத்து உழுதும் உழுவித்து உண்போரும் தவிர, வேளாண் கூலிகள் உள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளிலோ, பெருநிலக்கிழார்களுக்கும் கீழே சொந்த நிலம் வைத்திருந்தோரைவிடக் குத்தகைக்கு நிலமெடுத்திருந்த குடியானவர்களே (Tenants) மிகப் பெரும்பான்மையராக இருந்தனர். அந்தச் சூழலில், 'உழுபவனுக்கே நிலம்' என்னும் முழக்கம் அக் குடியானவர்களையே நோக்கி இருந்தது. அதனால் நாட்டுப்புற மக்களை அம் முழக்கம் ஈர்த்தது. ஆனால் சிறுவுடைமையர் மிகையாகவும் குடியானவர்கள் சிறிதாகவும் வேளாண் கூலிகள் குறிப்பிடும் அளவினராகவும் இருக்கும் தமிழகச் சூழலில், 'உழுபவனுக்கே நிலம்!' என்னும் முழக்கம் யாரை நோக்கி எழுப்பப்படுகிறதென்றே தெரியவில்லை என ஆய்ந்தோர் வினவுவர். தமிழகத்தில் மிகப் பெருமளவிலுள்ள கோயில் நிலங்களைப் பொறுத்த வரையில், அக் கோயில் நிலங்களை வழிவழியாகப் பாட்டத்திற்கோ குத்தகைக்கோ எடுத்து உழுதுண்ணும் குடியானவரை நோக்கியதாக அம் முழக்கம் இருக்குமாயின் அது பொருத்தமாக இருக்கும். அவர்களிலும், வந்தேறிகளை விலக்க வேண்டும். இதனால், இரவல் முழக்கம், தமிழகத்தின் நாட்டுப்புற விளைப்பாற்றல்களையும் விளைப்புறவு களையும் எந்த வகையில் மாற்றியமைப்பது என்பதைப் பற்றிய கள ஆய்வும் பட்டறிவும் இன்றி, வீட்டுக்கணக்குப் போடாமலேயே ஐரோப்பிய வாய்பாட்டைக் கொண்டு வந்து தமிழர் மீது திணித்தலில்

நன்மையைவிடத் தீமையே மிகுதி என்பது இங்குக் கோடிட்டுக் காட்டப்படுகின்றது.

தமிழ்த் தேசத்திற்கேற்ற பொதுமை நெறியை ஆக்கத் தெரியாமையாலும் முயலாமையாலுமே இத்தகைய கவைக்குதவாத முழக்கம் ஏறத்தாழ எழுபது ஆண்டுகளாகத் தமிழர் முன் வைக்கப் பெற்றது. இத்தகைய இரவலால் வரும் குழறுபடிகளையே பெருஞ்சித்திரனார் அவர்களின் பொதுமை ஓர்மை கேள்விக் குரியதாக்கியது.

யாதொரு தேசிய இனத்தையும் அது தோன்றுதொட்டு வாழ்ந்து வருகின்ற நிலத்தை வைத்தே குறிப்பிடுவர். ஆகவே, மண்ணுரிமை ஓர் இனத்தின் அடிப்படைத் தேவையும் உரிமையும் ஆகும். மண் பிடுங்கப்பெற்ற இனங்களெல்லாம் உதிரிகளாய்க் கெட்டுச் சீரழிந்து அடிமைக் கூட்டங்களாய்த் தன்மானமிழந்த நிலையில் பேருக்கு உழன்றுவருவதே உலகியல் மெய்ம்மை. எசுபானியர், போர்ச்சுகீசியர் போன்ற ஐரோப்பிய வந்தேறிகளால் அடிமைப்படுத்தப்பெற்ற செவ்விந்தியக்குடிகளும் ஆத்திரேலியத் தொல்குடியினரும் போன்ற பழங்குடியினரின் வீழ்ச்சிக்கும் தாழ்ச்சிக்கும் அவர்கள் தத்தம் மண்ணுரிமையை இழந்ததே பெருங்காரணம் என்பதை உலகறியும். ஆகவே, மண்ணுரிமை இழந்தோர் எல்லாமே இழந்தவராவர். ஓர் இனத்தவர், உதிரிகளாகியும் நாடோடிகளாகியும் அடிமைகளாகவும் இரவலர்களாகவும் மானமிழந்து போக மண்ணை இழத்தலே முதல் இழப்பு ஆகும். மண்ணிலிருந்து பிடுங்கி எறிந்த செடி பட்டுப்போவதைப் போல், மண்ணிழந்த மக்களும் பட்டுப் போவர்.

இந்த நூற்றாண்டின் தொடக்கம் முதல், வடதமிழ் மாவட்டங்களில் வந்தேறித் தெலுங்கர்களிடம் குறிப்பாகத் தொல்தமிழர்கள் மளமளவெனப் பெருமளவில் நிலம் இழந்ததை ஊர் அடங்கல்களும் நிலப்பதிவு ஆவணங்களும் காட்டுகின்றன. வந்தேறிகளின் இந்த மண்பறிப்பு, குமரி வரையில் அடியோடியுள்ளது. இதனால், தமிழரினமே மண்ணிழந்த மக்களினமாகக் கெட்டழிந்து போனது.

இதற்கிடையில், தமிழகத்தில் தெலுங்கர் நலன்கள் எழுப்பிய திராவிடநாடு பிரிவினை முழக்கத்தை கண்டு அரண்டுபோன தில்லிப் பேராண்டைகள், திராவிடத் தேசியம் என்னும் பொய்க் கோலத்தை தமிழர்களின் போர்க்கோலம் எனத் தவறாகப் புரிந்து கொண்டனர். தமிழகத்திற்கு நிலவியல் இறையாண்மை இல்லாமல் செய்யும் எண்ணத்துடன், தமிழர் இனத்திற்கென்றான மண்ணுரிமையைக் கொந்திக் கூறாக்கிட முனைந்தனர். மொழிவழி மாநிலங்களை

அமைப்பதென்னும் சாக்கில், தமிழகத்தின் வழிவழிவந்த எல்லைப் புறங்களையெல்லாம் அரிந்து, தெலுங்கர்களுக்கும் கன்னடர்களுக்கும் மலையாளிகளுக்கும் விருந்துவைத்து மகிழ்ந்தனர், அந்த இந்தி(ய) ஆண்டைகள். இதனால், தமிழகத்தின் தலையாம் வேங்கடமும் போனது; அதன் அடியான குமரியும் போய்கொண்டிருக்கின்றது. தமிழகத்தின் நிலவியல் இறையாண்மையைச் சூறையாட இந்தி(ய)ப் பேராண்டைகளின் கைப்பாவையாகினர் அத் திராவிடர்கள்.

தென்மொழி தொடங்கி 1959-ஆம் ஆண்டில் அதன் ஐந்தாவது இதழில் 'வெளியே கடும்போர்!' என்னும் சிறுகதை வெளியானது. அன்று மாணவர் ஒருவர் எழுதிய கதை அது. அதை அப்படியே இங்குத் தருகிறேன்.

தம்பீ! தம்பீ!'' என்ற குரல் கேட்டது. தம்பி இழுத்துப் போர்த்துக் கொண்டிருந்தான். தூக்கம்...!

''தமிழ் தம்பி! தமிழ்த்தம்பி;'' என்று இன்னொரு முறை அழைத்தாள் தமிழ்த்தாய்

தம்பி விழித்துப் பார்த்தான் -- தலையணையிலிருந்து தலையைத் தூக்காமல், என்ன? என்று குழறியபடி கேட்டது அவன் வாய். தூங்கி இன்பங் கண்டவன் அவன். எழுப்பியவரை நோக்கினான் எரிக்கும் விழிகளோடு.

''தம்பீ! சேவல் கூவிவிட்டது!'' என்றாள் தமிழ்த்தாய்.

''ஓகோ'' என்றான் தம்பி. இழுத்து மூடிக்கொண்டான். வெளியே பெருத்த ஒலி. சேவல் கூவுமுன்பே விழித்துக் கொண்டவர் அங்கிருந்தார்.

''எதிரே தெரியும் நில முழுதும் என்னுடையது'' என்றான் ஒருவன். ''இல்லை என்னுடையது'' என்றான் இன்னொருவன்.

'' நான்தான் அந்த நிலத்தை நீண்ட நாட்களாக உழுது வருகிறேன்!'' என்றான் இன்னொருவன்.

பேசியவர் எல்லாரும் முன்பே விழித்தவர்.

தமிழ்த்தாய் திரும்பவும் அறைக்குள்ளே போனாள். தூங்கிக் கொண்டிருந்த தம்பிகள்அத்தனை பேரையும் எழுப்பினாள்.

''தம்பீ! தம்பீ! நம் நிலமெல்லாம் பறிபோகிறது! வழி வழியாக

மறம்பேசி வளம் பொங்க நம் முன்னோர் உழுத நிலமப்பா! எழுந்திருந்து போங்கள்! உங்கள் வாழ்வையே சூறையாடச் சுற்றி நிற்கின்றன வல்லூறுகள்!'' என்றாள்.

முதல் தம்பி எழுந்திருந்தான், ஒரு நீண்ட கொட்டாவி விட்டான். ''அவன் நிலத்தை நெருங்க முடியுமா?'' மறம் பேசுவதாக எண்ணிக் கொண்டு தூங்கி வழிந்து கொண்டே கேட்டான். திரும்பவும் படுத்துக் கொண்டான். தமிழ்த்தாய் போய் அடுத்தவனைத் தட்டி எழுப்பினாள்.

''தம்பீ! நிலமெல்லாம் பறிபோகிறது! ஊரெல்லாம் கட்டியாண்ட உன் தாத்தா ஈட்டி வைத்த செல்வம் அப்பா!''

அந்த தம்பியும் எழுந்து உட்கார்ந்து,

''உம்.. நான் என் தாத்தாவின் பெயரனாயிற்றே! எவன் பக்கத்தில் வருவான்''?'' என்றான். திரும்பவும் படுக்கையில் படுத்துக் கொண்டான்.

தமிழ்த்தாய் அடுத்தவனிடம் போய்த் தட்டி எழுப்பினாள். சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்த தம்பி சீறி விழுந்தான்!

''அவனைத் தொட்ட கையாலா என்னைத் தொட்டாய்.''

''ஆம்!'' என்றாள் தாய், படபடப்பாக. தன் கண் முன்பாகவே தன் செல்வம் பறிபோவதை விரும்பாதவள் அவள்.

''சேச்சே! கையை எடு! தீட்டு! தீட்டு!'' என்று கத்தினான் தம்பி.

''அவன் உன் சொந்தத் தம்பியாயிற்றே!''

''பின்னே பக்கத்து வீட்டுக்காரன் சொன்னானே 'உன் தம்பியைத் தொட்டால் தீட்டு; அவன் தாழ்ந்தவன்' என்று?''

''அந்தப் பக்கத்து வீட்டுக்காரன் பார்! வீட்டுக்கு வெளியே நம் நிலத்துக்கு உரிமை கொண்டாடுகிறான்.''

''ஓகோ'' என்ற தம்பி படுத்துக் கொண்டான்!

அடுத்தவனை எழுப்பினாள் தமிழ்த்தாய்.

''என்னம்மா தொந்தரையா?'' என்று சீறினான் தம்பி.

''உன் நிலம் பறிபோகிறதப்பா! வட்டமிடுகின்றன வல்லூறுகள்!''

"இருந்தால் என்ன? அடுத்த வீட்டுக்காரன் இந்த நிலத்தில் எனக்குக் கொஞ்சம் பங்கு தருவதாக வாக்களித்திருகின்றான்!"

"யார் நிலத்தை யார் கொடை தருவது?"

"போம்மா! உலகம் தெரியாதவள்! எனக்கு நன்மையைத்தானே நான் பார்ப்பேன்?" அவனும் இழுத்துப் போர்த்துக் கொண்டான்.

"தமிழ்த்தாய் குருதிக் கண்ணீர் வடித்தாள். தேம்பித் தேம்பி அழுதாள்."ஐயகோ! நம் நிலத்தைக் காக்க ஒருவருமில்லையா?"

ஒருவனும் விழித்துப் பார்க்கவில்லை. எல்லாருக்கும் தூக்கம். மீளாத தூக்கம் தூங்குவார் நிலத்தின் உரிமையைக் கவர வெளியே கடும்போர்! ஒருவன் கண்ணை விழித்தான். தன் உணர்வு வந்தது அவனுக்கு. "ஐயோ நிலம் போகிறதே. பங்காளிகளே வாருங்கள்! தூங்கியது போதும்! இப்போது விழித்துக் கொள்ளாவிட்டால் இனிமேல் விழித்துக் கொள்ள முடியாது! எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்!" கத்திக் கத்தி ஓய்ந்து போனான் அவன்.

கத்தியதைக் கேளாமலே தூங்கியவர் சிலர். கேட்டும் கேளாதவர் போலிருந்தனர் -சிலர் கேட்டும் புரிந்து கொள்ளாதவர் சிலர். புரிந்து கொண்டும் அஞ்சிக் கொண்டிருந்தவர் சிலர். எல்லாரும் கண்ணை மூடிக் கொண்டிருந்தனர்.

கத்தியவன் கத்திக்கொண்டேயிருந்தான். கத்திக் கத்தித் தொண்டை கிழிந்தது. நெஞ்சுந்தான். மூக்கிலும் வாயிலும் உடலின் உயிர்நாடி பாயத் துடிதுடித்து அடங்கினான். வெளியே கடும்போர்! தூங்குவார் நிலத்துக்கு உரிமையாளனாகப் போராட்டம்! கொஞ்ச நேரம் சென்றது. இன்னொருவன் கண்ணை விழித்துப் பார்த்தான். "உம்! எதிரேயுள்ள நிலமத்தனையும் என்னுடையது. இதற்கு உரிமை கொண்டாட இவர் யார்? என் தாத்தா ஊரை ஆண்டவர். என் பாட்டன் பக்கத்து ஊரில் கொடி நாட்டியவர். என்னை எதிர்க்க யாரால் ஆகும்?" என்று தோளைத் தட்டினான் படுத்துக் கொண்டேதான்.

"களத்திலே புகுந்தால் அத்தனை தலையையும் அம்மானை ஆடிடுவேன்! அவர்தம் குருதி குடித்து வேட்கை அடங்குவேன்!" என்றான். அரைத் தூக்கத்திலிருந்து கொண்டே அவன் கதை அதோடு முடிந்தது.

வெளியே கடும்போர்! தூங்குபவனது நிலத்துக்கு உரிமையாளனாக ஆக! கொஞ்சம் நேரம் சென்றது. இன்னொருவன் கண்ணை விழித்துப் பார்த்தான். வெளியே போரிட்டுக் கொண்டிருந்தவரில் ஒருவன் இவன் விழித்துக் கொண்டதைப் பார்த்தான். கையைக் காட்டினான். இவனே அங்கே போனான். இவன் சிரித்தான். அவன் சிரித்தான். அவன் வாழ்ந்தான். இவன் செத்தான். அவன் கதை அதோடு முடிந்தது.

வெளியே கடும்போர்! தூங்கும் நிலத்துக்கு உரிமையாளனாக ஆக! கொஞ்ச நேரம் சென்றது. இன்னொருவன் கண்ணை விழித்தான். அவனே நத்தி வாழ்வதில் தேர்ச்சி பெற்றவன். அதன்படியே தன் கதையை முடித்துக் கொண்டான் அவன்.

இன்னொருவன் கண்ணை விழித்தான். அவன் ஒரு கோழை. அஞ்சி அஞ்சியே தன் கதையை முடித்துக் கொண்டான்.

இன்னொருவன் கண்ணை விழித்தான். அவன் நாவன்மையாளன். கல்வியில் -சிறந்தவன். பேச்சிலேயே தன்வாழ்வை முடித்துக் கொண்டான்.

வெளியே கடும்போர்! தூங்குவார் நிலத்துக்கு உரிமை கொண்டாட! தமிழ்த்தாய் எழற்குத் திறனின்றி எழுவாள். ஒவ்வொருவனையும் ஆவலுடன் பார்த்து ஏமாந்து குருதிக் கண்ணீர் கொட்டினாள்.

''வெளியே கடும்போர்! --

''தூங்குவார் நிலத்தைச் சூறையாட, கொள்ளையிட, ...''

இக்கதை,திராவிடர்கள் தமிழரின் மண்ணை மடிபறித்த சூழ்ச்சியைக் குறித்தது. ஆயினும், தமிழரின் மண்ணுரிமை பறிபோனதைப் பற்றிய இத்தகைய கருத்தியல் மிக அருகலாகவே தென்மொழியில் வெளிப்பட்டது. இதனால், அம் மண்ணுரிமையை மீட்டல் என்பதும், வந்தேறிகளை விரட்டுவதென்பதும் தென்மொழியில் வெளிப்படுத்தப் படாமை ஒரு பெரிய முரணணியாகவேபடுகின்றது. திராவிடக் கருத்தியலை எதிர்க்க இயலாமை ஒருபுறம் இருக்கட்டும். குருதி குடிக்கும் அட்டைகளாய்ப் பெருத்துவந்த மார்வாடி குசராத்திய வந்தேறிகளைக்கூடத் தமிழர் மண்ணைவிட்டு விரட்டச் சொல்லித் தனித்தமிழியக்கம் அறைகூவல் விடாதது ஒரு பெரிய புதிராகும்.

(தொடரும்)

நாயகம்

– குழந்தை

'நாலாளுக்கு மேலாளாக' இருக்க வேண்டும் என்பதுதான் மக்களில் பெரும்பாலோர் விருப்பம். சிறிது பொறுப்புச் சுமை இருந்தாலும் உழைப்புக் குறைவு என்பது மட்டுமன்று; மற்றவர்களை அதிகாரஞ் செய்து வேலை வாங்குவதில் உள்ள இன்பமே தனியன்றோ!

ஆட்களை வைத்துச் செயற்படும் எந்தத் தொழிலுக்கும் மேலாள் ஒருவர் தேவை. அத்தகைய மேலாளை மேத்திரி (மேஸ்திரி) என்று அழைப்பது இன்று வழக்கமாக உள்ளது. கட்டடங் கட்டுதல், சாலையமைப்பு முதலான பணிகள் நடைபெறும் இடங்களிலெல்லாம் இத்தகைய மேத்திரிகள் பலரை நாம் சந்திக்கலாம்.

அரசுத் துறைகளான பொதுப்பணித்துறை, தொல்பொருள் ஆய்வுத்துறை போன்ற பல துறைகளில் மேத்திரி என்ற பெயரில் பற்பல பணிகள் உள்ளன. நாட்கூலிப் பணியாளர்களையும் அடிப்படை உடலுழைப்புப் பணியாளர்களையும் வேலைவாங்கும் பொறுப்பினை இம்மேத்திரிகள் மேற்கொண்டுள்ளனர்.

தமிழிற் புகுந்து, தமிழரிடையே சாய்கால் பெற்றிருக்கும் இம்மேத்திரி முகலாயர் ஆட்சிக் காலத்தில் வருகை தந்த ஓர் இந்துத்தானி!

ஆட்களை வேலைவாங்கும் அதிகாரிகள் பழங்காலத்தில் நாயகம் என்று அழைக்கப் பெற்றனர். "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே'' என்னும் திருவாசகப் பகுதியில் இந் நாயகத்தை நாம் கண்டுகொள்ளலாம்.

பழங்கால மக்கள் வழக்குகளை யறியப் பெரிதும் பயன்படும் கல்வெட்டுகளில் நாயகம் என்னுஞ் சொல் பரவலாக இடம் பெற்றுள்ளது.

திருக்கோயில்களுக்குப் பூக்கொய்து கொடுத்தல், பூந்தோட்டங்கள், செங்கழுநீர் ஓடைகள் முதலியன அமைத்துப் பேணுதல் முதலிய பணிசெய்பவர்களுக்கு நாயகஞ் செய்யத் தலையாட்கள் பலர் அந்நாளில் அமர்த்தப் பெற்றிருந்தனர் என்பது,

> ''திருப்பூர்த் தொண்டர்களுக்கு நாயகஞ் செய்வார்களில்
> குவளைப்பாக் கிழான் நின்றயங்கி ஆடுவானும்.''

"முதல் கொள்ள நிச்சயதித்த குடிகள் பேர் பதின்மர்க்கும் நாயகம் ஒன்றுக்கும்..."

என வரும் தில்லை (சிதம்பரம்) கல்வெட்டுப் பகுதிகளால் அறியப்படுகிறது. (283/1913-325/1915)

இவ்வாறே பலதுறைப் பணிகளிலும் நாயகஞ் செய்வார் அமர்த்தப் பெற்றிருந்ததனை

"தளிச்சேரிப் பெண்களுக்கும் கந்தர்விகளுக்கும் நாயகஞ் செய்யக் காவூர் பரஞ்சோதிக்குப் பங்கு ஒன்றும் ..." (தஞ்சை தெ.இ.க.2:7)

"ஆளுடையார் கோயில் நாயகஞ் செய் வாரும் திருமாளிகைக் கூறு செய்வாரும்" (தில்லை. 266,1913)

"சிறுதனத்துக் கற்றச்சர்க்குக் கண்காணி நாயகஞ் செய்யும் உய்யக்கொண்டார் வளநாட்டு விரைநாட்டு..." (தெ.இ.க.2)

எனவருங் கல்வெட்டுப் பகுதிகள் புலப்படுத்துகின்றன.

நாயகங்களை மேற்பார்வையிடும் கண்காணி நாயகங்களும் அமர்த்தப் பெற்றிருந்தனர் என்றும் அறிகிறோம்.

நாயகம் பற்றிப் பன்னூறு சான்றுகள் கல்வெட்டுகளில் பரவிக் கிடக்கின்றன. இங்கு மாதிரிக்காகச் சிலவற்றை மட்டுமே காட்டியுள்ளோம்.

இலக்கிய வழக்கிலும் மக்கள் வழக்கிலும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழகத்தில் ஆட்சி பெற்றிருந்த நாயகம் அயலார் வரவால் ஓரங்கட்டப் பட்டுவிட்ட நிலையையே காணுகின்றோம். மேத்திரியின் மேலாண்மையை வீழ்த்தி நாயகம் நல்லாட்சி பெற ஆவன செய்வோமாக!

ஆசிரியர் இல்ல முகவரி

பாவலரேறு தமிழ்க்களக் கட்டுமானப் பணிக்கு வாய்ப்பாக மேடவாக்கத்தின் அவ்விடத்தின் அருகிலேயே திருவாட்டி. தாமரையம்மையார் இல்லம் மாற்றப்பட்டுள்ளது. இனி அன்பர்கள் கீழ்க்காணும் முகவரியைக் குறித்துப் பயன்படுத்த வேண்டுகிறோம்.

திருவாட்டி. தாமரை பெருஞ்சித்திரனார்.
சி.கே. அடுக்குமாடி இல்லம். (G.K. Flats)
காயிதே மில்லத் கல்லூரி எதிரில்,
வேளச்சேரி சாலை, மேடவாக்கம். சென்னை - 601302.

மக்களவை

ஐயா,

'திராவிடத்தால் வீழ்ந்தோமா? திராவிடம் மாயையா? என்று ஆராய்ந்து பார்க்க வேண்டிய சூழல் இன்று உருவாகியுள்ளது.

திராவிடம் என்பதை இனப்போர் என்னும் அடிப்படையில் ஆராய்ந்தாலும் உண்மையில் அது தமிழனுக்கும் ஆரியனுக்கும் நடந்த இனப் போராகவே தெரிகிறது. இன்றுவரை தமிழ்நாட்டில்தான் அந்த இனப்போரின் கால எச்சங்கள் தொடர்வதை உணரமுடிகிறது! வேறு எங்கும் அப்படி வெளிச்சமாக எதிர்த்துப் போரிடவில்லை! இதை வெளிப்படையாகச் சொல்ல இன்னமும் அச்சப்படுகின்றார்கள் பெரும்பாலோர். முனைவர் நன்னன் அவர்கள், "தமிழர்கள் என்று சொல்லத் தொடங்கினால் இந்த ஆரியப் பார்ப்பனர்களெல்லாம், நாங்களும் தமிழர்கள் என்று சொல்வார்கள் என்று பெரியார் சொல்லி மூன்று மாநிலங்களையும் சேர்த்துத் திராவிடம் என்று சொல்லத் தொடங்கினார். நம்முடைய இயக்கங்களில் அவர்களை உள்ளே விடக்கூடாது என்பதற்காகக் கட்டிய மதில்தான், அமைத்த மின்சாரவேலிதான் திராவிடம். அந்தக் 'காப்பு'அரணைப் பெரியார் அமைத்தார்" - என்று கூறியுள்ளார். இதைச் சற்று விரிவாக ஆராயவேண்டியுள்ளது.

தந்தை பெரியார் கூறிய 'திராவிடநாடு' நிலப்பரப்பும் இன்றைய தமிழ்நிலப்பரப்பும், தமிழ்த்தேசிய கட்டமைப்பும் ஒன்றில்லை! அது காலத்தின் வளர்ச்சி. தமிழ்- தமிழ்த்தேசியநாடு- தமிழ்நாடு என வளர்ச்சியுற்றதை முதலில் எண்ணவேண்டும்.

திராவிடநாட்டுக் கோரிக்கையை விட்டுவிட்டு, தந்தை பெரியார் பின் தன் வாழ்நாள் இறுதியில் தமிழ்நாடு தமிழர்க்கே! என முழங்கி அதுவும் வளர்ச்சியுற்று, ''தமிழனிடம் பிற அயலார் எவரும் ஆட்சி அதிகாரம் என்று வரக்கூடாது'' என்று கூறியுள்ளதை எவரும் மறுக்க முடியாது.

தமிழர் தவிர, மற்றுத் தெலுங்கர், கன்னடியர், மலையாளியர் முதலானவர்கள் தம்மைத் திராவிடர் என்று சுட்டிக் கொள்வதே கிடையாது.

தமிழ்மொழி 'திராவிடமொழி' யானதை- அதாவது அப்படி அழைக்கப்பட்டது என்பதைப் பாவாணர் முதல் தமிழறிஞர்கள் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வல்லாண்மை (ஆதிக்கம்) செலுத்திய, ஆரியப் பார்ப்பனர்கள் இருந்த காலத்தில் பார்ப்பனர், பார்ப்பனர் அல்லார் - என வரையறுத்தது போல், திராவிட இயக்கங்களில் இன்று தமிழர் - தமிழரல்லார் என்று வரையறுக்க வேண்டிய கட்டாயம் வந்துள்ளது!

-ஆக இப்படிச் சொல்லப்படும் கருத்துகளை மறுக்காமல், வெறும் திராவிடம் என்பதாலேயே தமிழன் காக்கப்படுகின்றான் என்ற வழக்குரை (வாதம்) இங்கே வீழ்த்தப்படுவதைக் காணலாம்!

இதே கருத்தை நம் ஐயா பாவலரேறு அவர்கள் 'திராவிடர் என்றதால் தமிழர் என்பதை மறந்தோம்' என்ற தொடரில் குறிப்பிட்டுள்ளார். (தமிழ்நிலம் இதழ் எண் 168.)

முனைவர் நன்னன் அவர்கள், பொதுவாகப் பார்ப்பனர்களுக்குத் 'திராவிடம்' மின்சாரவேலி என்கின்றார்.

திராவிடத்தால் கட்டப்பெற்ற ஆட்சி அதிகாரம் இன்று யார் கையில்? அ.இ.அ.தி.மு.க.-தலைமை மலையாளியாகவும், இன்று கன்னடப்பார்ப்பனத்தியாகவும் வந்த போது மின்சார வேலி தடுக்கவில்லையே... ஏன்?

முதல்வர் செயலலிதா சிறுபான்மை மொழிகளை ஆட்சிமொழியாக்கி ஆணையிட்டபோது - குறிப்பாகத் தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழி பேசுவோர் பகுதி சில வற்றை அறிவித்தபோது அதை எந்தத் திராவிட இயக்கமும் வலுவாக எதிர்க்கவில்லையே..ஏன்? அதே போல் அவ்வப்போது தெலுங்கு இரண்டாம் மொழியாக அறிவிக்கப்படவேண்டும் என்று தெலுங்கர்கள் கேட்பதையும்,அண்மையில் ஓமந்தூர் இராமசாமி(ரெட்டியார்) நூற்றாண்டு மாநாட்டில் தீர்மானம் போட்டதையும் எந்தத் திராவிடக் கட்சியும் எதிர்த்துக் குரல் எழுப்பவில்லையே ...ஏன்?

ஆனால், பக்கத்து மாநிலங்களில் தத்தம் மாநில மொழிகளான, தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆகியவை ஆட்சிமொழியாக, முதன் மொழியாக அறிவிக்கப்பட்டுள்ளன. அங்கு எங்காவது தமிழைத் துணைமொழியாக்க வேண்டும் என்று திராவிடம் கூக்குரல் எழுப்புகிறதா? இல்லையே! இங்குத் தமிழே ஆட்சி மொழியாக்கப்பட்டும் நடைமுறைக்கு வராதது இந்தத் 'திராவிடர்'களால்தான் என்பதை ஏன் மறந்து போனார் நன்னன்?

திராவிட இயக்கத்தவர்களில் ஒரு சாரார் ஆரியப் பார்ப்பன ஆட்சியாளர்களை அடிதொட்டு வணங்கும்போதும், அவர்களோடு

'ஆமாம்' ஓதித்தாளம் (ஜால்ரா) தட்டும் போதும், அந்த மின்சாரம் பாயவில்லையே - அதிர்ந்தடிக்கவில்லையே ஏன்?

எங்கே போய்விட்டது அந்த மின்காப்பு?

தந்தை பெரியாரின் சிந்தனைகள் பார்ப்பனிய எதிர்ப்பு மட்டுமன்று. இன-மானச் சிந்தனையும்கூட! பல இடங்களில் இதை அவரின் எழுத்துக்களின் ஊடே காணலாம்! பெரியாருடைய கொள்கையின் கடைசி வரி என்னவென்று தெரியாதா? 'என்னைத் திறனாய்வு செய்யுங்கள் அதன் மேல் இனமான உணர்வு பெறுங்கள்' என்பதே! அதற்காகப் பெரியாரை இழிவுபடுத்தி எழுதுவதாலோ அல்லது அவருக்கு வாழ்த்து (துதி) பாடுவதனால் மட்டுமோ தமிழன் உயரமாட்டான்! 'நான் சொல்வது சரியானால் எடுத்துக் கொள்ளுங்கள் இல்லையேல் புறம் தள்ளுங்கள்!' என்று பெரியாரே அடிக்கடி கூறுவதன் அடிப்படையிலே ஆராய்தல் வேண்டும் ! அப்படித்தான் பெரியாரின் கொள்கைகளை -சிந்தனைகளைப் படிப்படியாக வளர்த்தெடுக்க முடியும்! 'எங்களுக்குப் பெரியார் கொடுத்த அறிவே போதும் . வேறு எதுவும் வேண்டாம்' என்ற மூடப் பகுத்தறிவை இன்று விதைப்பவர்களால் தமிழன் உருப்பட முடியுமா? இதுவா பெரியாரின் தன்மான அறிவு? தன்மதிப்பு உணர்வு? திராவிட இயக்கத்தவர்கள் 'நான் மொழியால் தமிழன் ,இனத்தால் திராவிடன், நாட்டால் இந்தியன்' என்று முழங்குகின்றனர். இம்முழக்கம் சரியா? என்று தமிழன், நான் மொழியால் தமிழன்- இனத்தால் தமிழன் - நாட்டாலும் தமிழன் என்று முழங்கு கின்றானோ- அன்று தான் உருப்படுவான்!

இவண்--**சி.வெற்றிவேந்தன்**

பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவு மலர்!

* பாவலரேறு வாழ்க்கைச் சுருக்கம்!
* அரிய ஒளிப் படங்கள்!
* அறிஞர் பெருமக்களின் கருத்துக்கோவை!
* தி.பி. 2027 ஆடவையில் (சூன் 96) வெளிவருகிறது!
* ஐயா அவர்களின் பல்வேறு சிறப்புகள் பற்றிய கருத்துக் களஞ்சியமாகத்தோற்றப்பொலிவுடன் உருவாகிக் கொண்டுள்ளது!

'தென்மொழி'
சென்னை – 5.

– **பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவு மலர்க் குழுவினர்**

ஐயாவின் பற்றுறுதி!

– கோ. கேசவன்

ஐயா பாவலரேறு அவர்களோடு எனக்கு அதிகம் பழக்கமில்லாவிட்டாலும் அவருடைய நூல்களைப் படித்துள்ளேன் ; உரைகளைக் கேட்டுள்ளேன்; அவரது இயக்கத் தோழர்களோடு கலந்துரையாடும் வாய்ப்புக்களையும் சில நேரங்களில் பெற்றுள்ளேன். இந்த வகையில் ஐயாவைப் பற்றியும் அவர் தம் கருத்துகள் பற்றியும் சிலவற்றைக் குறிப்பிட இயலும்.

ஐயாவின் வாழ்விலும் சிந்தனையிலும் இரண்டு கருத்தாக்கங்கள் ஊடாடி நிறைந்துள்ளன. ஒன்று பார்ப்பனிய எதிர்ப்பு. மற்றொன்று அரசின் அடக்குமுறைகளுக்காக, கொண்ட கொள்கையைக் கைவிட்டு விடலோ நீர்த்துப் போகச் செய்தலோ இல்லாமல் கொள்கை மீதான கடும்பற்றுறுதி ஆகும். ஐயாவின் பார்ப்பனிய எதிர்ப்பு என்பது வெறும் பார்ப்பனிய எதிர்ப்பாக மட்டுமே அமைந்திராமல், சமய மறுப்பு அடிப்படையில் அமைந்த இந்து மத எதிர்ப்பாக அமைந்துள்ளது.

தமிழகத்தில் சிந்தனையாளர்கள், செயல்வீரர்கள், ஆகியோர் பலர் அரசின் அடக்குமுறைகளுக்குப் பின்னர் செயலிழந்து போயுள்ளனர்; ஒருவாறு உடன்பாடு காணத் தொடங்கி இறுதியில் அடிமைப்படலாயினர். இந்த வகையில் ஐயாவின் பற்றுறுதி பாராட்டத்தக்கது. இதை இன்னொரு முறையில் பார்த்தால் அரசின் அடக்குமுறைகளுக்குப் (பாசிசத்துக்கு) பணியாமை எனலாம். இந்த இரண்டு கருத்தாக்கங்களையும் நடைமுறைகளையும் ஐயாவிடம் காண இயலும். இந்து மத அடிப்படையிலான குமுக அமைப்பு. முதலாளிய அடக்குமுறை அரசதிகாரக் கூட்டமைப்பு ஆகியன நிலவும் வரையில் ஐயாவின் இத்தகைய பாக்களிப்புகளில் இருந்து நாம் குமுகாயப் புரட்சிக்கான கூறுகளைக் கண்டறிந்து பயன்படுத்த இயலும்.

ஐயா 'தடா' சட்டத்தின் கீழ்ச் சிறைப்படுத்தப் பட்டபோது அவரை விடுவிக்கக் கோரித் தமிழ்நாடு மார்க்சிய இலெனினிய அமைப்பினர் நடத்திய சில கூட்டங்களில் கலந்து கொண்ட பின்னர் என் மீதான, காவல்துறை உசாவலின்போது ஒன்றை உறுதியாகத் தெரிந்து கொள்ள

திருச்சியில் 14–11–95 அன்று நடைபெற்ற பாவலரேறு நினைவேந்தல் நிகழ்ச்சியில் ஆற்றிய உரையின் சுருக்கம்.

முடிந்தது. தமிழ்நாடு விடுதலை என்ற ஐயாவின் முழக்கம் ஆளும் வகுப்பினர்க்கு அச்சத்தைக் கொடுத்துள்ளது என்பதே அதுவாகும். ஐயாவின் கருத்துகளைப் படிப்பவர்களும் பயன்படுத்துபவர்களும் மிகமிகக் குறைவெனினும், அரசதிகாரம் ஐயாவைக் கண்டும் அவரின் கருத்துகளைக் கண்டும் அச்சப்பட்டதன் காரணம் விளங்கியது. தமிழ்நாட்டு அரசியலின் எதிர்காலத்தை இத்தகைய கருத்துகள் மேலாளுமை செய்துவிடக்கூடாதே என்கிற அரசின் கவலையே ஐயா மீதான அடக்குமுறைக்குக் காரணமாக அமைந்திருந்தது. அரசின் கருத்துக்கு எதிரான மாற்றுக் கருத்தை கூறக் கூட உரிமையற்ற நாட்டில் நாம் வாழ்கிறோம் என்பது மீண்டும் உறுதியாயிற்று. இதை குடியாட்சி நாடு எனக்கூறுவது பித்தலாட்டம் ஆகும்.

ஐயாவை ஆய்வுக் கண்ணோட்டத்தில் அணுக வேண்டும்; ஐயாவின் சிந்தனைகளும் நடைமுறைகளும் நமது எதிர்கால நல்வாழ்விற்குப் பயன்படும் அளவிற்கு அவற்றை ஆய்வுப் பொருளாக்க வேண்டும் என்னும் அடிப்படையில், அந்த வகையில் என்னால் இப்போது ஒன்றை மட்டும் எடுத்துக் கொள்ளமுடியும். தமிழ்த்தேசிய இனத்துக்கும் நடுவண் அரசதிகார கட்டமைப்புக்கும் உற்ற முரண்பாடுகளை ஐயா கவனத்தில் கொண்ட அளவுக்கு தமிழ்த் தேசிய இனத்துக்கு உள்ளேயே உறைந்துள்ள முரண்பாடுகளை கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை எனத் தோன்றுகிறது. தமிழ்த் தேசிய இனத்துக்கும் நடுவண் அரசதிகாரத்துக்கும் இடையிலான முரண்பாட்டைக்கூட, அதன் தேசிய இனம் மற்றும் மரபினம் ஆகிய அடிப்படைகளில் ஐயா கவனம் செலுத்திய அளவுக்கு வகுப்புரை அதன் (வர்க்க) அடிப்படையில் காணுவதில் கவனம் செலுத்தவில்லை. இந்த வகையில் எல்லாக் கோணங்களையும் முற்றாகக் கண்டறிய இயலாமல் போய்விட்டது. அதே நேரத்தில் தமிழ்த் தேசிய இனத்தின் அமைந்த சாதிய, வகுப்பு அளவுகளிலான முரண்பாடுகைளப் பற்றிக்கூட ஐயாவின் கவனம் முற்றாகத் திரும்பவில்லை. ஐயாவின் கனவு, முழுமையான மக்கள் உரிமை கொண்ட தமிழகமாக அமைந்திருப்பதை நாம் வரவேற்கின்ற நேரத்தில் மேற்கூறிய முரண்பாடுகளையும் ஐயா அவற்றின் தன்மைகட்கு ஏற்ப கவனத்திற் கொண்டிருக்க வேண்டும்.

ஐயாவின் நினைவேந்தல் நிகழ்ச்சியை நாம் வெறும் சடங்குப் போக்காகவோ தனி மாந்த "வழிபாடாகவோ" கொள்ளக் கூடாது. ஐயாவின் கொள்கைகளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். இன்றைய குமுகாய நடைமுறைக்கு உரிய கண்ணோட்டத்தில் அவற்றைப் பொருத்துவது குறித்த வழிமுறைகளைத் தேட வேண்டும். அதுவே ஐயா அவர்களை நினைவுகூர்தலாக இருக்க முடியும்.

செய்திகள்

தலைநகர்த் தமிழ்ச் சங்க அறப்போர்

ஆங்கில வழிப்பள்ளிகளுக்குத் தனி இயக்ககம் தொடங்குவதைக் கண்டித்தும், தமிழ் வழிக் கல்வியை வலியுறுத்தியும் சென்னை தலைநகர் தமிழ் சங்கத்தின் சார்பில் கடந்த கன்னிமாதம் முதல் நாள் (16.9.95)அன்று வள்ளுவர் கோட்டம் அருகில் பட்டினிஅறப் போர் நடைபெற்றது. காலை 8 மணியளவில் முனைவர் தமிழண்ணல், தலைமையிலும், பேரா. சேது முன்னிலையிலும், முனைவர் சிலம்பொலி செல்லப்பனார் இவ்வறப்போரைத் தொடங்கி வைத்தார். தமிழகம் அளாவிய பல்வேறு அமைப்புகளின் பன்னூற்றுவர் பங்கேற்றனர். ‘தென்மொழி அவைய’ச் சார்பில் அன்னை தாமரை பெருஞ்சித்திரனார் திருவாட்டி இறை பொற்கொடி ஆகியோர் கலந்து கொண்டனர். மாலை 5 மணியளவில் முனைவர் சாலை இளந்திரையனார் பட்டினிப் போரை முடித்து வைத்து உரையாற்றினார். புலவர் சுந்தரராசன் நன்றி நவின்றார்.

தென்மொழி அவையத் தொடக்கவிழா

திகமாவட்டம் சாத்தனூரில்- அரசினர் மேனிலைப் பள்ளித் திடலில் கடந்த துலாம் 12 அன்று (29.10.95) பிற்பகல் 2 மணிக்குத் தலைமையாசிரியர் திரு. ஆ. இராமலிங்கம் தலைமையில் தென்மொழி அவையத் தொடக்கவிழா நடைபெற்றது. மேனாள் தலைமையாசிரியர் திரு.மா.முத்துச்சாமி அமைப்பைத் தொடங்கிவைத்துச் சிறப்புரை யாற்றினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை அமைப்பாளர் புலவர் மு. ஆறுமுகம் செய்திருந்தார்.

‘மருதம்’ இல்லத் திறப்புவிழா

சென்னை - எரணாவூர்க் கிரிசா நகரில், கடந்த நளி 15 அன்று (1.12.95) எண்ணூர் அசோக் இலேலண்டு பைந்தமிழ்ப் பாசறையின் ஏடலாளர் திரு. அன்புக்குமரனின் புதுமனை (மருதம்) புகுவிழா திரு.மு.ஞானசம்பந்தன் தலைமையிலும் திரு.கி. அருணாசலம் முன்னிலையிலும் நடைபெற்றது. திருக்குறள்மணி இறைக்குருவனார் வாழ்த்துரை வழங்கினார். முன்னதாகத் திருவள்ளுவர், பெரியார், அண்ணா படங்களைத் திறந்து வைத்து முனைவர் சுப. வீரபாண்டியன், பேரா. சொக்கலிங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

தனித்தமிழ் இலக்கிய மாநாடு

புதுவை தனித்தமிழ் கழகத்தின் சார்பில், சிலை, 1,2 (காரி, ஞாயி) ஆகிய நாட்களில் (95, திசு. 16, 17) மூன்றாவது தனித் தமிழ் இலக்கிய மாநாடு தனித்தமிழ்க் கழகத் தலைவர் மன்றவாணன் தலைமையில் நடந்தது.

காரி மாலை 4 மணிக்குத் தொடங்கித் திரு.சபா.குப்புசாமி தலைமையில் நடைபெற்ற எழுச்சிமிகு ஊர்வலத்துக்குப் பின்னர் இரவு 7 மணிக்குக் கம்பன் கலையரங்கம் பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவு அரங்கத்தில் மாநாடு தொடங்கியது. தமிழறிஞர்கள் பலர் பாராட்டப்பெற்றனர். ஞாயிறு முற்பகல் திரு. க. சுப்பையா குழுவினரின் இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்து கழகப் பொருளாளர் விண்கோ தலைமையில் நூல் வெளியீட்டரங்கமும், அடுத்துத் திரு.முத்துச்சேரன் தலைமையில் கருத்தரங்கமும், நடைபெற்றன. பிற்பகல் திரு.எ.சிவானந்தம் இசைநிகழ்ச்சியைத் தொடர்ந்து திருநமு. தமிழ்மணி தலைமையில் பாவரங்கமும், பின்னர் முனைவர் நன்னன் தலைமையில் பட்டி மன்றமும் நடைபெற்றன.

தொடர்ந்து திருசீனு அரிமாப் பாண்டியன் தலைமையில் நடைபெற்ற 'தனித்தமிழ் விருந்து' நிகழ்ச்சியில் 'தென்மொழி' ஆசிரியர் அன்னை தாமரைபெருஞ்சித்திரனார் அவர்கட்குப் பேராம.இலெ தங்கப்பா நன்றி பாராட்டிப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். தென்மொழி வளர்ச்சிக் கொடையாக உரு3000 (மூவாயிரம்) வழங்கப் பெற்றது. அனைத்து நிகழ்ச்சிகளிலும் தலைசிறந்த தமிழறிஞர்கள் பங்கேற்றனர். மக்கள் பெருந்திரளாக வருகை தந்து கலந்து கொண்டனர். திரு.பெ.தமிழ்நாவன் தலைமையில் புட்பவனம் குப்புசாமி அனிதா குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. கழகச் செயலாளர் வே. ஆறுமுகம் நன்றி நவின்றார்.

கண்டன ஆர்ப்பாட்டம்

ஆங்கில வழி மழலையர் (Nursery) பள்ளிகள், பதினிலை (Matriculation) பள்ளிகள் ஆகியவற்றுக்கெனத் தனி இயக்ககம் தொடங்குவதை எதிர்த்தும். தமிழ் வழியில் பயின்ற மாணவர்களுக்கு உயர்கல்வியில் ஒதுக்கீடு கோரியும், தமிழகத் தமிழாசிரியர் கழகம் முதலான பல்வேறு அமைப்புகள் இணைந்த தமிழுரிமைக் கூட்டமைப்பின் சார்பில் கடந்த சிலை 25 அறிவன் (10196) அன்று மாலை 3.30 மணிக்குச் சென்னை- குறளகம் எதிரில் புலவர் கிதபச்சையப்பன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. பல்வேறு அமைப்புகளின் சார்பில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு முழக்கமிட்டனர். தென்மொழி அவையத்தின் சார்பில் தென்மொழி ஆசிரியர் அன்னை தாமரை பெருஞ்சித்திரனார், புலவர் இறைக் குருவனார், திரு. குணத்தொகையான், திருவாட்டியர் அ.தேன்மொழி, குபிறைநுதல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

மணலிபுதுநகர்- செந்தமிழ்ச் சோலை

சென்னை- மணலி புதுநகர்ச் **'செந்தமிழ்ச் சோலை'**யின் சார்பில், திருவள்ளுவர் சிலை அருகில் சுறவம் 2 அன்று (16196) மாலை 5

மணியளவில் பாவலரேறு நினைவேந்தல் நிகழ்ச்சி அமைப்பின் தலைவர் பேரா. **சொக்கலிங்கம்** தலைமையிலும் **தமிழ்நம்பி**, **குக. எழிலன்**, **இரவீந்திரநாத்** ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. துணைத்தலைவர் **துரை இராவணன்** வரவேற்றுப் பேசினார். செயலாளர் **அறிவுடைநம்பி** அறிமுகவுரை நிகழ்த்தினார்.திருவாளர்கள் **சம்பந்தம்**, **சந்திரபோசு**, மொழிப் போர் **கருணாநிதி**, பாவலர்கள் **செழியன்**, **தமிழ்நம்பி** ஆகியோரும் பைந்தமிழ்ப் பாசறைச் செயலாளர் **துரை. தென்னவன்** ஆகியோரும் உரையாற்றினர். திருக்குறள் போட்டிகளில் வெற்றி பெற்றோர்க்குச் சோலையின் சார்பில் பரிசளித்துப் பாராட்டிய சொல்லாய்வு அறிஞர் **அருளியார்**, பாவலரேறு ஐயா அவர்களின் படத்தை திறந்து வைத்து நிறைவுரையாற்றினர்.

முன்னதாகப் **'பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறக்கட்டளை'**க்கான பொருட்கொடையாக உரு3000/- (மூவாயிரம்) செந்தமிழ்ச் சோலையின் சார்பில் சொல்லாய்வு அறிஞர் **அருளியார்** அவர்களால், அறக்கட்டளை நிறுவனரும் தென்மொழி ஆசிரியருமான **அன்னை தாமரை பெருஞ்சித்திரனார்** அவர்களிடம் வழங்கப்பெற்றது. மொழிப்போர் ஈகி கருணாநிதி உரு101/(நூற்றொன்று) அளித்தார்.

திருவள்ளுவர் மழலையர் பள்ளி (திருவான்மியூர்)!

சென்னை- திருவான்மியூர் திருவள்ளுவர் மழலையர் பள்ளியின் சார்பில் திருவள்ளுவர் திருநாள் ஊர்வல நிகழ்ச்சி சிலை 13 (27196) காலை 10.30 மணியளவில் நடைபெற்றது. ஊர்வலம் முடிந்து பள்ளியில் **கன்னியப்பன்** வரவேற்புரை ஆற்றினார். திரு. **குணத்தொகையன்** தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாவலர்கள் **முல்லைவாணன்**, **குழந்தைவேலன்**, **இளஞ்சித்திரன்**, **அறிவுடைநம்பி**, **த.இலங்கேசுவரன்**, **அங்கயற்கண்ணி** மயிலை மாணவர் மன்றத் தோழர், பள்ளி தலைமை ஆசிரியை பொற்கொடி ஆகியோர் சிறப்புரையாற்ற புலவர் **இறைக்குருவனார்** நன்றி கூற விழா இனிது முடிந்தது.

மாணவர் நற்பணி மன்றம் (மயிலை)

சென்னை - மயிலாப்பூர் மாணவர் நற்பணிமன்றத்தின் சார்பில் திருவள்ளுவர் திருநாளன்று (16.196) காலை 10 மணிக்குத் திருவள்ளுவர் கோயிலிலிருந்து திருக்குறள் எழுச்சி ஊர்வலம் புறப்பட்டு திருவள்ளுவர் சிலையை வந்தடைந்தது. திரு. தமிழோசை திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்தார். திருக்குறள்மணி புலவர் **இறைக்குருவனார்** நிறைவுரை யாற்றினார். ஊர்வல நிகழ்ச்சியில் மயிலை நகர நற்பணிமன்றத்தினரும், திருவான்மியூர் திருவள்ளுவர் மழலையர் பள்ளியினரும், பல்வேறு பகுதிகளைச் சார்ந்த தமிழன்பர்களும் பங்கேற்றனர்.

பைந்தமிழ்ப் பாசறையின்
'தென்மொழிக் குடும்பநலக் கொடை'

சென்னை- எண்ணூர் அசோக் இலேலண்டு பைந்தமிழ்ப் பாசறையின் சார்பில் சிலை 8 காரி (23.12.95) அன்று முற்பகல் 11 மணியளவில், தொழிலக முதன்மைவாயில் எதிரில், பாசறைத் தலைவர் பாவலர் தென்முக நம்பி தலைமையில் ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து எரிமலைப் பாவரங்கம் நடைபெற்றது. பாவலர்கள் தமிழ் நம்பி, செழியன், வந்தியத் தேவன், அறிவுடைநம்பி ஆகியோர் கலந்து கொண்டு பா முழங்கினர்.தொடர்ந்து நடந்த மனக்கொதிப்புரை நிகழ்ச்சியில் சொல்லாய்வு அறிஞர் அருளியார், திருவாளர்கள் ஈழவேந்தன், தமிழோசை ஆகியோர் கொதிப்புரைநிகழ்த்தினர். பாசறைத் துணைத்தலைவர் சிவபெருமான் நன்றி நவின்றார்.

பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்ற பாவலரேறு குடும்ப நலக்கொடை வழங்கும் நிகழ்ச்சியில் திரு.துரை.தென்னவன் வரவேற்புரையாற்ற முனைவர் அரசேந்திரன், அசோக் இலேலண்டு தொழிலாளர் கழகப் பொதுச்செயலாளர் நா.துரைராசு ஆகியோர் உரையாற்றினர்.

பாசறையின் சார்பில் தொழிலகத் தமிழன்பர்களிடம் திரட்டப்பெற்ற பாவலரேறு குடும்பநலத்தொகை உரு. 38,000 (முப்பத் தெட்டாயிரத்துக்கான) திராவிடன் நல நிதி நிறுவன நிலைவைப்புத் தொகைச் சான்றிதழும், புத்தாடை, பழங்கள் முதலியனவும் வைக்கப்பெற்ற நிலைவெள்ளித் தட்டைப் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் இராமதாசு அவர்கள், தென்மொழி ஆசிரியர் அன்னை தாமரை பெருஞ்சித்திரனார் அவர்களிடம் வழங்கிச் சிறப்புரையாற்றினார். பாசறை இணைச் செயலாளர் மாரிமுத்து நன்றி நவின்றார். இருவேளை நிகழ்ச்சிகளிலும் தொழிலாளத் தோழர்களும் திருவொற்றியூர், எண்ணூர் தமிழன்பர்களும் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

* விழுமிய செய்யுள் நடையில் இயற்றப்பெற்றது!

* கழக(சங்க) இலக்கியப் பாங்கில் அமைந்தது!

* விரிவான உரை விளக்கங்களையும் உடன் கொண்டது!

பாவலரேறு ஐயா அவர்களின்

'நூறாசிரியம்'

வெளியீட்டுவிழா

காலம் : திபி. 2027 மீனம் 3 காரி (16-3-96)
இடம் : சென்னை
தலைமை : திருக்குறள்மணி இறைக்குருவனார்
வரவேற்புரை : திரு. மா. பூங்குன்றன் க.மு.மெய்.மு.
அறிமுகவுரை : சொல்லாய்வு அறிஞர். அருளியார்

நூலை வெளியிட்டு உரையாற்றுபவர்:
முனைவர் சாலினி இளந்திரையனார்

நூற் கருத்துரை

பேராசிரியர் அன்பழகனார் முனைவர் சாலையார், பேரா.தீரன், முனைவோர் ஆறு. அழகப்பனார், முனைவர். பொற்கோ, முனைவர் க.ப.அறவாணனார் முனைவர் சிலம்பொலி செல்லப்பனார் முனைவர். ச.சு. இளங்கோ, திரு.இரா.பாவாணன். திரு. பழ. கருப்பையா, முனைவர். கடவூர் ப. மணிமாறன், புலவர் கதிர். தமிழ்வாணன், முனைவர். கு.அரசேந்திரன், பாவலர் இரணியன் ஆகியோர் பங்கேற்க அழைக்கப் பெற்றுள்ளனர்.

தென்மொழி நூல் வெளியீட்டு
விற்பனையகம்

தென்மொழி அச்சகம், சென்னை – 600 005. (தொலைபேசி எண்: 847829)